பக்கங்கள் 24

காலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2058 | தை 05 திங்கட்கிழமை 19.01.2026 | அதிர்வு 172

## எதிரணியின் மிரட்டலுக்கு இந்த அரசு அடிபணியாது!

### அமைச்சர் லால் காந்த விளாசல்



எதிர்க்கட்சிகளின் மிரட்டல் நாடகங்களுக்கு இந்த அரசு அடிபணியாது என்று அமைச்சர்

05▶




# தமிழ் மக்களுக்கு ஏற்ற தீர்வுத் திட்டம் அவசியம்

## தமிழ்க் கட்சிகள் ஒன்றிணைய வேண்டும் என்றும் சங்குக் கூட்டணியினர் வலியுறுத்து

(கி.வசந்தன்)

"புதிய அரசியல் யாப்பில் தமிழ் மக்களுக்கு ஒத்துவரக்கூடிய ஒரு தீர்வுத் திட்டத்தை முன்வைக்கத் தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றுபட்டு முன்வர வேண்டும்."

- இவ்வாறு ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஊடகப் பேச்சாளரும், ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியின் தலைவரும், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான சுரேஷ் பிரேமச்சந்திரன் தெரிவித்தார்.

வவுனியா விருந்தினர் விடுதி ஒன்றில் நேற்று நடைபெற்ற ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் கலந்துரையாடலின் பின் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

**கட்சியின் மாநாடு**

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் கூட்டத்தில் பல தீர்மானங்கள் எடுக்கப்பட்டன. அதில் 2026 ஆம் ஆண்டுக்கான வேலைத்திட்டங்கள் தொடர்பாக ஆராயப்பட்டன. கட்சியைப் பலப்படுத்துவதற்கான நடவடிக்கைகள் தொடர்பில் தீர்மானம் எடுக்கப்பட்டது. வருகின்ற மாதம் கட்சியின் மாநாட்டைக் கூட்டுவதற்கும் தீர்மானித்துள்ளோம்.

**மாகாண சபைத் தேர்தல்**

அத்துடன், காலத்தைப் பின்னடித்துச் செல்லாமல் மாகாண சபைத் தேர்தலை அரசு நடத்த வேண்டும் என்பது எங்களது ஏகோபித்த கோரிக்கையாக உள்ளது. தமிழரசுக் கட்சி உட்பட ஏனைய தமிழ்க் கட்சிகளும் மாகாண சபைத் தேர்தலை வைக்க வேண்டும் என்று வலியுறுத்தியுள்ளனன. ஆகவே, அரசு மாகாண சபைத் தேர்தலைப் பின்னடிக்காமல் உடனடியாக நடத்த வேண்டும்.

04▶




நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரனை அரசமைப்புக் கவுன்ஸிலில் இருந்து ஒரு வாரத்துக்குள் விலகும்படி பணித்து இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அரசியல் குழு எடுத்த முடிவை கட்சியின் பொதுச் செயலாளர் சுமந்திரன் எழுத்து மூலம் சிறிதரனுக்கு அறிவித்து ஒரு வாரம் தாண்டி விட்டது. ஆனால் சிறிதரன் அந்தப் பதவியை ராஜினாமாச் செய்யவில்லை. செய்யப் போகின்றவராகவும் தெரியவில்லை.

மாறாக, கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானத்திற்கு அவர் இரண்டு தினங்களுக்கு முன்னர் பதிவுத் தபாலில் ஒரு கடிதத்தை அனுப்பி வைத்திருக்கிறார் என அறிய வந்தது.

கடிதத்தின் முழு விவரமும் தெரிய வரவில்லை. சிறிதரன் தரப்பு கடிதத்தின் உள்ளடக்கம் குறித்து மூச்சு விடவில்லை.

04▶

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally

# தைப்பொங்கலை வடக்கு மாகாணத்தின் முதன்மைப் பெருவிழாவாக மாற்றத் திட்டம்

## ஆளுநர் வேதநாயகன் அறிவிப்பு















எதிர்காலத்தில் வடக்கு மாகாணக் கல்வி மற்றும் பண்பாட்டலுவல்கள் அமைச்சு, மாகாண சுற்றுலாப் பணியகம், மற்றும் விவசாய அமைச்சு ஆகிய மூன்று முக்கிய அமைச்சுக்களும் துறைகளும் ஒன்றிணைந்து, தைப்பொங்கல் பண்டிகையை வடக்கு மாகாணத்தின் "முதன்மைப் பெருவிழாவாக" கொண்டாடுவது சிறப்பாக அமையும் என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகின் ஏற்பாட்டில், "வடக்கு மாகாணப் பொங்கல் விழா - 2026" நேற்று ஞாயிற்றுக்கிழமை வரலாற்றுச் சிறப்புமிக்க மன்னார் திருக்கேதீஸ்வரம் திருக்கோவில் முன்றலில் நடைபெற்றது.

நிகழ்வின் ஆரம்பமாக, தமிழர் பாரம்பரிய முறைப்படி வயல் நிலத்தில் "புதிரெடுத்தல்" நிகழ்வும், அதனைத் தொடர்ந்து ஆலய முன்றலில் பொங்கலிடும் நிகழ்வும் இடம்பெற்றது. தொடர்ந்து திருக்கேதீஸ்வர நாதருக்கு விசேட பூசை வழிபாடுகள் மேற்கொள்ளப்பட்டன.

இதன் பின்னர் நடைபெற்ற மேடை நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய ஆளுநர் தெரிவித்ததாவது:-

"இம்முறை தைத்திருநாள் எமது வடக்கு மாகாண மக்களுக்கு மிகவும் விசேடமானதாக, நம்பிக்கையூட்டும் ஒரு பண்டிகையாக அமைந்திருக்கின்றது. "தை பிறந்தால் வழி பிறக்கும்" என்ற முன்னோர் வாக்கை மெய்ப்பிக்கும் வகையில், நாட்டின் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க இம்முறை தைப்பொங்கலை யாழ்ப்பாணத்தில் எமது மக்களோடு இணைந்து கொண்டாடி மகிழ்ந்திருக்கின்றார்.

அவர் வெறுமனே ஒரு பண்டிகைக் கொண்டாட்டத்துக்காக மாத்திரம் வரவில்லை. கடந்த ஆண்டு இறுதியில் ஏற்பட்ட 'டித்வா' புயல் இடரால் பாதிக்கப்பட்ட எமது விவசாயிகள் மற்றும் கால்நடை வளர்ப்பாளர்களுக்கான இழப்பீடு வழங்கும் பணியை அவர் ஆரம்பித்து வைத்தார். போரால் பாதிக்கப்பட்டு வீடில்லாத எமது மக்களுக்கான வீட்டுத்திட்டங்களுக்கு அடிக்கல் நட்டு, பயனாளிகளுக்கான காசோலைகளையும் வழங்கி வைத்தார்.

எல்லாவற்றுக்கும் மேலாக, எமது இளம் சந்ததியைச் சீரழிக்கும் உயிர் கொல்லி போதைப்பொருளை இந்த மண்ணிலிருந்து முற்றாக ஒழிப்பதற்கான தேசியச் செயற்றிட்டத்தையும் அவர் ஆரம்பித்து வைத்துள்ளார். ஜனாதிபதி எடுத்திருக்கும் இந்த ஆக்கபூர்வமான நடவடிக்கைகளால், தமிழ் மக்கள் அவர் மீது மிகுந்த நம்பிக்கை வைத்திருக்கின்றனர்.

பொங்கல் பண்டிகை என்பது தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் எமது இனத்தின் "தனித்துவமான பண்டிகை" ஆகும். இதனை எதிர்காலத்தில் எமது மாகாணத்தில் இன்னும் சிறப்பாகவும், பிரமாண்டமாகவும் நாம் கொண்டாட வேண்டும். தைப்பொங்கல் என்பது உழவர் திருநாள் அது எமது பண்பாடு அதுவே எமது அடையாளம்.

எனவே, எதிர்காலத்தில் வடக்கு மாகாண விவசாய அமைச்சு, வடக்கு மாகாண சுற்றுலாப் பணியகம் மற்றும் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் ஆகிய மூன்றும் ஒன்றிணைந்து, கூட்டு முயற்சியாக இந்த விழாவை முன்னெடுக்க வேண்டும். இதன் மூலம், எமது விவசாயப் பெருமக்களைக் கௌரவிக்க முடியும். எமது கலை கலாசாரத்தை உலகுக்குக் காட்ட முடியும். அதேவேளை, ஆன்மீக மற்றும் கலாசாரச் சுற்றுலாவை மேம்படுத்தி, அதிகளவான சுற்றுலாவிகளை எமது மாகாணத்துக்கு ஈர்க்கவும் முடியும்.

மன்னார் மாவட்டம் எமது மாகாணத்தின் 'அரிசி கிண்ணம்' ஆகும். பொங்கல் என்பது இயற்கைக்கு நன்றி சொல்லும் விழா. எங்களுக்கு உணவைத் தரும் "நடமாடும் கடவுள்களான" விவசாயிகளுக்கு நன்றி சொல்லும் ஒரு பெருநாள். ஆனால், துரதிஷ்டவசமாக, இயற்கையை நாம் அளவுக்கு அதிகமாகச் சீண்டியதன் விளைவுகளை, "பருவகாலநிலை மாற்றம்" என்ற பாரிய அச்சுறுத்தலாக நாம் கண்ணூடாகப் பார்க்கின்றோம். முன்னர் இருந்தது போன்ற துல்லியமான

தொடர்ச்சி▼

# தைப்பொங்கலை வடக்கு மாகாணத்தின் முதன்மைப் பெருவிழாவாக மாற்றத் திட்டம்











தொடர்ச்சி▲

மழைக்காலங்கள் இப்போது இல்லை. அனைத்தும் தலைகீழாக மாறியுள்ளன.

எனவே, மாறிவரும் இந்தக் காலநிலை மாற்றத்துக்கு ஏற்ப, எமது பயிர்ச்செய்கை முறைகளையும், கால்நடை வளர்ப்பு முறைகளையும் நாங்கள் மாற்றியமைத்துக் கொள்ள வேண்டிய கட்டாய நிர்ப்பந்தத்தில் இருக்கின்றோம். எமது பழைமையான பாரம்பரிய முறைகளைக் கைவிடாமல், தற்போதைய காலநிலை மாற்றத்தைத் தாக்குப் பிடிக்கக்கூடிய புதிய விஞ்ஞான ரீதியான முறைகளையும் அத்தோடு உள்வாங்கிக் கொள்ளுங்கள். இயற்கையோடு இயைந்த வாழ்வுதான் சிறந்தது என்பதை இந்தப் பொங்கல் எமக்கு உணர்த்துகின்றது." – என்றார்.

நேற்றைய நிகழ்வுகள் மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து, மன்னார் சவேரியார் பெண்கள் பாடசாலை மாணவிகளின் வரவேற்பு நடனத்துடன் ஆரம்பமாகின. பண்பாட்டலுவல்கள் அலகின் உதவிப் பணிப்பாளர் திருமதி என்.தர்சினியின் வரவேற்புரையைத் தொடர்ந்து, வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையுரை நிகழ்த்தினார்.

தொடர்ந்து மன்னார் திரு அம்பலக் கூத்தன் நாட்டியக் கல்லூரி மாணவிகளின் "சூரிய வணக்க நடனம்" நடைபெற்றது. மன்னார் மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரன் கௌரவ விருந்தினர் உரையை நிகழ்த்தினார். அதனைத் தொடர்ந்து திருக்கேதீஸ்வரம் சிவனருள் இல்ல மாணவிகளின் "மகிழ்வித்து மகிழ்வோம்" நடனம் நடைபெற்றது. வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன் சிறப்பு விருந்தினர் உரையை நிகழ்த்தினார்.

இதனைத் தொடர்ந்து பரதகலாலயா நாட்டியப் பள்ளி மாணவிகளின் ஒயிலாட்டம், கலையருவி மாணவிகளின் ஏந்தல் நடனம், கலார்ப்பணா நாட்டியப் பள்ளி மாணவிகளின் கதம்ப நடனம் மற்றும் தீந்சா திருத்தியோதயம் கலாமந்திர் மாணவிகளின் கோலாட்டம் ஆகியன கண்ணுக்கினிய கலை நிகழ்வுகளாக அரங்கேறின.

நிகழ்வின் ஒரு பகுதியாக, வடக்கு மாகாண சபையின் குறித்தொதுக்கப்பட்ட அபிவிருத்தி நன்கொடை நிதியின் கீழ், தெரிவு செய்யப்பட்ட கலா மன்றங்கள் மற்றும் விளையாட்டுக் கழகங்களுக்கான உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. இறுதியாக ஸ்ரீ சித்தி விநாயகர் அறநெறிப் பாடசாலை மாணவிகளின் கிராமிய நடனம் நடைபெற்றதுடன், பாரம்பரிய விளையாட்டுப் போட்டிகளும் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் திருமதி தனுஜா முருகேசன், வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன், மன்னார் மாவட்ட செயலாளர் க.கனகேஸ்வரன், மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எம்.பிரதீப், மன்னார் மாவட்ட உதவி மாவட்ட செயலாளர், வடக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் அலகின் உதவிப் பணிப்பாளர் திருமதி என்.தர்சினி, வடக்கு மாகாண விளையாட்டுத்துறைப் பணிப்பாளர் பா.முகுந்தன், திணைக்களத் தலைவர்கள் மற்றும் பெருந்திரளான பொதுமக்கள் கலந்துகொண்டனர்.

# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

## இரகசியம் பரகசியம்...

கட்சித் தலைவர் அல்லது அவரிடமிருந்து அதன் பிரதியை பெற்றுக் கொண்டு பொதுச் செயலாளர் அதை வெளியிட்டால் மாத்திரமே கடிதத்தின் உள்ளடக்கம் வரிக்கு வரி வெளியே வரும் என எதிர்பார்க்கலாம்.

கடிதத்தில், மேற்படி கட்சியின் அரசியல் குழுக் கூட்டத்தில் தான் பங்குபற்ற முடியாமல் இருக்கின்றமை பற்றி கூட்டத்திற்கு முதல் நாள் இரவு எட்டு மணிக்குத் தான் நேரடியாக தலைவர் சிவஞானத்தின் இல்லத்துக்குத் தேடி வந்து, அவரைச் சந்தித்து, அவரிடம் விளக்கமாக எடுத்துரைத்தமை குறித்து சிறிதரன் நினைவூட்டி இருக்கிறார் எனத் தெரிகின்றது.

அந்த அரசியல் குழுக் கூட்டத்தில் வேறு சில விடயங்கள் பற்றி மட்டுமே பேசப்பட இருப்பதாக தலைவர் சிவஞானம் தமக்கு அப்போது தெரிவித்திருந்தமையையும், அரசமைப்புக்கு கவுன்ஸில் தொடர்பான தமது நடவடிக்கை குறித்து அக்கூட்டத்தில் பேசப்படும் என்று எந்த விடயத்தையும் தலைவர் அப்போது தமக்கு தெரிவிக்காதமையையும் இந்த கடிதத்தில் சிறிதரன் விவரித்திருக்கிறார் எனவும் அறிய வந்தது.

தமக்கு எதிராகக் கட்சிக்குள் பதவித் தேர்தலில் போட்டியிட்ட தரப்புகளும், தம்மைக் கட்சியிலிருந்து ஓரங்கட்ட முயற்சிப்பவர்களும் இல்லாத நடுநிலைத் தரப்பொன்றின் மூலம் இந்த அரசமைப்பு கவுன்ஸிலில் செயற்பாடுகள் பற்றிய விடயங்கள் கட்சியினால் விசாரிக்கப்படுமானால், அத்தகைய விசாரணைக்கு முழு ஒத்துழைப்பு வழங்கி, ஒரு தீர்மானத்தை எடுக்கத் தான் உதவுவார் என்பதை இந்த கடிதத்தில் சிறிதரன் கோடிகாட்டி இருக்கிறார் எனவும் அறிய வருகிறது.

இந்தக் கடிதத்தை அடுத்து இது பற்றி ஆராய்வதற்காக அரசியல் குழுவை அல்லது மத்திய குழுவை கட்சியின் தலைவர் சி.வி.கே.சிவஞானம் உடனடியாகக் கூட்டுவாரா என்பது தெரியவில்லை.

இதற்கிடையில் சிறிதரன் எம்.பியின் செயற்பாடு தொடர்பில் சில விடயங்களை ஆராய்வதற்காக மத்திய குழுவின் கூட்டத்தை உடனடியாக கூட்டுமாறு கட்சித் தலைவருக்கு மத்திய குழு உறுப்பினர்கள் பலர் கடிதம் எழுதி இருக்கின்றனர் என்று அறிய வருகின்றது.

முன்னர் கிளிநொச்சி மாவட்டத்தில் சிறிதரன் எம்.பியின் வலது கையாகச் செயற்பட்ட ஜீவராஜா என்பவர் கடந்த பொதுத் தேர்தலை அடுத்து கட்சியிலிருந்து முற்றாக நீக்கப்பட்டிருந்தார். அவர் அண்மையில் கட்சியின் மத்திய குழு உறுப்பினர்கள் அனவருக்கும் எழுதிய கடிதத்தின் அடிப்படையில் இந்தக் கடிதங்கள் இப்போது மத்திய குழு உறுப்பினர்களால் கட்சித் தலைமைக்கு தற்சமயம் எழுதப்பட்டு வருகின்றன எனத் தெரிகின்றது.

கட்சியின் கொழும்புக் கிளைத் தலைவர் இரத்தினவடிவேல் உட்பட ஐந்துக்கும் குறையாத மத்திய குழு உறுப்பினர்கள் இந்தக் கடிதங்களை கட்சியின் தலைவருக்கும் செயலாளருக்கும் இதுவரை அனுப்பி இருக்கிறார்கள் என்பதை உறுதிப்படுத்த முடிந்தது. மேலும் சிலர் கடிதம் எழுதியிருக்கலாம்.

பல உறுப்பினர்களால் வித்தியாசமான கடிதங்கள் அனுப்பப்பட்டாலும் அவற்றின் சாராம்சத்தைக் கோடி காட்டுவதற்காக அவற்றில் ஒன்றில் தெரிவிக்கப்பட்ட விடயங்களைக் கீழே தருகிறேன்.

‘சிவஞானம் சிறிதரன், நா.உ. அவர்களது எதிர்மறையான நடவடிக்கைகள்’ என்ற தலைப்பிலான அந்தக் கடிதத்தின் விவரம் வருமாறு:-

சிறிதரன் அவர்களினால் மேற்கொள்ளப்பட்டிருந்த கட்சி தொடர்பிலான பல்வேறு ஒழுங்கு மீறல்கள் தொடர்பாக அண்மையில் தங்களின் மேலான கவனத்திற்கு நேரில் கொண்டு வந்திருந்தேன்.

தற்போது, இவற்றுக்கு மேலாக கட்சியிலிருந்து தாம் நீக்கப்பட்டமையை மறுபரிசீலனை செய்யுமாறு கோரி திரு. ஜீவராஜா அவர்கள், அனைத்து மத்திய குழு உறுப்பினர்களுக்கும் பிரதியிட்டு, தங்களுக்கு அனுப்பியுள்ள 2026-01-04 எனத் திகதியிட்ட கடிதத்தில் அவரால் குறிப்பிடப்பட்டுள்ள ஒழுக்க மீறல் மிகவும் பாரதூரமானதாக உள்ளமையை அவதானிக்க முடிகின்றது.

அக்கடிதத்தில், கடந்த பொதுத் தேர்தலின்போது தம்மை ஒரு சுயேச்சைக் குழுவிற்குத் தலைமையேற்று போட்டியிடுமாறும் திரு.சிறிதரன் பணித்தமையுடன் தேர்தல் செலவுகளையும் அவரே வழங்கி, வேட்பாளர்களையும் அவரே ஒழுங்குபடுத்தித் தந்தார் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது மிகவும் பாரதூரமான ஒழுக்க மீறல் என்பதைத் தாங்களும் ஏற்றுக் கொள்வீர்கள். குறிப்பிட்ட சுயேச்சைக் குழுவிற்குக் கிடைத்த வாக்குகள் அனேகமானவை தமிழரசுக் கட்சிக்குச் சேர்ந்திருக்கவேண்டியவை. அவை கிடைக்கப்பெற்றிருப்பின் நிச்சயமாக தமிழரசுக் கட்சிக்கு யாழ் மாவட்டத்தில் மேலும் ஒரு நாடாளுமன்ற ஆசனம் கிடைக்கப்பெற்றிருக்கும். அத்துடன் என்.பி.பிக்கு ஒரு ஆசனம் குறைந்திருக்கும்.

இந்த மோசமான நடவடிக்கையால் இரண்டு பாரதூரமான விளைவுகள் ஏற்பட்டுள்ளன. ஒன்று எமக்கான ஓர் ஆசனம் இல்லாது போனமை. இரண்டாவது என்.பி.பியினருக்கு கூடுதல் ஆசனமொன்று கிடைத்தமை.

தவிரவும், அரச இயந்திரத்தை இராணுவமயமாக்கும் நடவடிக்கைக்கான எமது எதிர்ப்பையும் மீறி அண்மையில் கணக்காளர் நாயகத்திற்கான பதவிக்கு இராணுவத்தினர் ஒருவரை நியமிக்க அவரால் (சிறிதரனினால்) வழங்கப்பட்ட ஆதரவு எமது மக்கள் எமது கட்சி மீது வைத்துள்ள நம்பிக்கைக்கு விழுந்துள்ள பேரிடியாகக் கருதப்படுகிறது.

இந்தப் பின்னணிகளில், சிறிதரன் அவர்களின் இத்தகைய மோசமான ஒழுக்க மீறல்கள் தொடர்பில் கட்சி தொடர்ந்து வாளாவிருப்பது கட்சி மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கைக்கு உகந்ததாக இருக்க முடியாது.

எனவே, தயவுசெய்து, இந்த விடயங்களை ஆராய்ந்து, உடனடியாக குறிப்பாக, சுயேச்சைக் குழு தொடர்பில் நா.உ. சிறிதரனிடம் விளக்கம் கோரி, தேவைப்படின், கட்சியிலிருந்து இடைநிறுத்தி விசாரணைகளை ஆரம்பிக்குமாறு வேண்டுகிறேன்.

- என்பது கடிதத்தின் சாராம்சம்.

சிறிதரன் எம்.பிக்கு இது போறாத காலம் என்றே தோன்றுகின்றது.

---

## தமிழ் மக்களுக்கு...

எம்மைப் பொறுத்தவரை பழைய முறைப்படி மாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டும். அது தமிழ் மக்களது தேவையாகவும் கோரிக்கையாகவும் உள்ளது. இது தொடர்பாக மலையகத் தமிழ்க் கட்சிகள், முஸ்லிம் கட்சிகள், மாகாண சபைத் தேர்தலை நடத்த விரும்பும் சிங்கள கட்சிகள் என்பனவும் வலியுறுத்தி வருகின்றன.

### புதிய அரசமைப்பு

இந்த அரசு, புதிய அரசியல் யாப்பைக் கொண்டு வருமாக இருந்தால் அந்தப் புதிய அரசியல் யாப்பில் தமிழ் மக்களது தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வாக என்ன விடயங்கள் உள்ளடக்கப் போகின்றார்கள் என்பதைத் தமிழ்த் தரப்புடன் அவர்கள் பேச வேண்டும். தமிழ்த் தரப்பு அதற்கான ஒரு பொது முடிவுக்கு வர வேண்டும்.

ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி, தமிழரசுக் கட்சி, தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி போன்றன ஓர் இணக்கப்பாட்டுக்கு வர வேண்டும். அரசியல் தீர்வு, பொது விடயம், தமிழ் மக்களது நலன் சார்ந்த விடயம் என்ற அடிப்படையில் தமிழ் மக்களுக்கு ஒத்துவரக் கூடிய ஒரு தீர்வு திட்டத்தை முன்வைக்க வேண்டும். பல தீர்வுத் திட்டங்கள் ஏற்கனவே இருந்தாலும் கூட நாங்கள் ஒருமுகப்படுத்தி சரியான தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டும் என்ற தேவை உள்ளது. எல்லோரும் இணைந்து அதனை முன்வைக்க வேண்டும்.

### பயங்கரவாதத் தடைச் சட்டம்

மேலும், பயங்கரவாதத் தடைச் சட்டம் முற்று முழுதாக நீக்கப்பட வேண்டும். தற்போது புதிய வடிவத்தில் புதிய பயங்கரவாதத் தடைச் சட்டம் கொண்டு வரப்படுகின்றது.

இலங்கையில் உள்ள புத்திஜீவிகள் எல்லோரும் அதனை நிராகரித்துள்ளார்கள். சர்வதேச மனித உரிமைகள் அமைப்புக்கள் கூட அதனை நிராகரித்துள்ளது. இலங்கையின் சட்டத்தில் இருந்து பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும். சாதாரண குற்றங்களுக்கு இருக்கின்ற சட்டங்கள் இருக்கின்றன. அதனைப் பயன்படுத்த முடியும்.

### பிரஜா சக்தி

தற்போதைய அரசாங்கம் பிரஜா சக்தி என்ற பெயரில் ஒவ்வொரு கிராமத்துக்கும் தனது கட்சியினுடைய ஒரு பிரதிநிதியை அரசு நியமிக்கும் நிலையைப் பார்க்கின்றோம். ஒவ்வொரு கிராம சேவகர் பிரிவிலும் அதனை நாங்கள் பார்க்கின்றோம். ஒவ்வொரு கிராமத்துக்கும் பல உத்தியோகத்தர்கள் இருக்கின்றார்கள். அதனைத் தாண்டி பிரஜா சக்தி என்ற பெயரில் தமது கட்சி சார்ந்தவரை நியமிக்கும் நடவடிக்கையை எடுத்துள்ளார்கள். அவர் யாருக்குக் கட்டுப்பட்டவர் என்ற கேள்வி எழுந்துள்ளது. அவர் மாவட்ட அபிவிருத்திக் குழுத் தலைவருக்குக் கீழே உள்ளார். அவர் பிரதேச செயலாளர் உட்பட யாருக்கும் கட்டுப்பட்டவர் அல்லர். உண்மையாகவே மக்களால் தெரிவு செய்யப்பட்ட உள்ளூராட்சி மன்ற உறுப்பினர்கள், அரச உத்தியோகத்தர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களை ஓரம் கட்டி தாம் நியமித்த உறுப்பினர்கள் ஊடாக வேலை செய்வது ஒரு ஜனநாயக விரோத செயற்பாடு. அது நிறுத்தப்பட வேண்டும். அவருக்குரிய தகமை என்ன? இது சட்டவிரோத செயற்பாடு. அது நிறுத்தப்பட வேண்டும்.

தொடர்ந்தும் தமிழ்த் தரப்புக்கள் ஒன்றுபட்டுச் செயற்பட வேண்டும் என்பது தொடர்பிலும் தீர்மானித்துள்ளோம். - என்றார்.



# பேலியகொடையில் ஒருவர் கத்தியால் குத்திக் கொலை!

கத்தியால் குத்தி ஆண் ஒருவர் படுகொலை செய்யப்பட்டார்.

இந்தச் சம்பவம் பேலியகொடை – மீகஹவத்த பகுதியில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

இரு தரப்பினரிடையே ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாகக் கத்திக் குத்தில் ஒருவர் படுகாயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்தார் என்று மருத்துவர்கள் உறுதிப்படுத்தினர்.

உயிரிழந்தவர் வத்தளை – ஒலிய முல்ல பகுதியைச் சேர்ந்த 38 வயதுடையவராவார்.

இந்தத் தாக்குதலுடன் தொடர்புடைய சந்தேகநபரும் காயமடைந்து கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

புறாக்கள் தொடர்பான தகராறில் இந்தக் கொலை இடம்பெற்றது என்று ஆரம்பகட்ட விசாரணைகளில் தெரிய வந்தது.

இது தொடர்பில் பேலியகொடை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# கார் மோதி ஒருவர் பலி!

## சடலம் அடையாளம் காணப்படவில்லை



கார் மோதி பாதசாரி ஒருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் பிலியந்தலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மாற்றுப் பாதையில் சிறிமங்கலவத்த வீதிக்கு அருகில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றுள்ளது.

கொழும்பில் இருந்து கெஸ்பாவ நோக்கிச் சென்ற கார், பாதசாரி மீது மோதியதில் பலத்த காயமடைந்த அவர் பிலியந்தலை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

விபத்தில் உயிரிழந்தவரின் அடையாளம் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

இது தொடர்பில் பிலியந்தலை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சி

**எதிரணியின்...**

லால் காந்த தெரிவித்தார்.

"போலியான விடயங்களைக் குறிப்பிட்டுக் கொண்டு ஒரு தரப்பினர் போராட்டத்தில் ஈடுபடுகின்றமையாலும், இன்னொரு தரப்பினர் சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபடுபட்டமையாலும் புதிய கல்விக்கொள்கை அமுல்படுத்தல் பிற்போடப்படவில்லை. நடைமுறையில் தோற்றம் பெற்ற சிக்கல்களுக்கு தீர்வு காண்பதற்காகவே ஆறாம் தரத்துக்கான புதிய பாடத்தொகுதி 2027 ஆம் ஆண்டு வரை பிற்போடப்பட்டுள்ளது." – என்றும் அவர் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"நாட்டில் தற்போதைய பிரதான பேசுபொருளாக கல்விச் சீர்த்திருத்தம் காணப்படுகின்றது. எதிர்க்கட்சிகளின் போலியான குற்றச்சாட்டுக்களினால் தவறான நிலைப்பாடு தீவிரமடைந்தது.

எதிர்க்கட்சித் தலைவரும் இனவாதிகளின் நிலைக்குத் தள்ளப்பட்டமை அதிருப்திக்குரியது. புதிய கல்வித் திருத்தத்துக்கு எதிரான போராட்டத்தில் ஈடுபடுகின்றமையாலும், சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்டமையாலும் புதிய கல்விக் கொள்கையை அரசு பிற்போடவில்லை.

ஆறாம் தரத்துக்கான புதிய பாடத்திட்டம் மாத்திரமே 2027 ஆம் ஆண்டு வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. புதிய கல்விக் கொள்கை தொடர்பில் விரிவான கலந்துரையாடலில் ஈடுபடுவோம்." – என்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## சங்கை ஊதிய ஆண்டி!

தையிட்டி திஸ்ஸ விகாரை விடயம் குறித்து யாழ்ப்பாணத்தில் பகிரங்க நிகழ்வில் பேச ஆரம்பித்த ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க அந்த விடயத்தில், இரண்டு பக்கத்திற்கும் - தமிழர் தரப்புக்கும், பௌத்த, சிங்கள பேரினவாதத் தரப்புக்கும் - இடையில் தான் நடுநிலையாளர் என காட்ட முயன்றார். அதற்காகத் தென்னிலங்கைக்கு தரப்பினருக்கு ஒரு தட்டுத் தட்டி வைக்கும் எண்ணத்தோடு அவர் கூறிய கருத்துக்கள் தெற்கில் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தி விட்டன.

“போயான நாளில் ‘சில்’ அனுஷ்டிப்பதற்காக சிலர் சிறிமகாபோதியை (அநுராதபுரத்தில் இருக்கும் புனித வெள்ளரசு விருட்சத்தை) கடந்து - தாண்டி- யாழ்ப்பாணத்தில் ஒரு குறிப்பிட்ட இடத்திற்கு (தையிட்டியை அவர் குறிப்பிடுகிறார்) செல்வது மத ரீதியான மகத்துவமான செயல் அல்ல, மாறாக மத வெறுப்பால் (குரோதத்தால்) இயக்கப்படும் செயலாக கருதப்படக் கூடியது” என்று அவர் குறிப்பிட்டார். இதுவே தென்னிலங்கையில் பெரும் சீற்றத்தை ஏற்படுத்தியிருப்பதாகத் தெரிகின்றது.

ஜனாதிபதி தெரிவித்த இந்தக் கருத்து நாட்டில் அடிப்படைவாதத்தை ஊக்குவிப்பதாக அமைகின்றது என்று சீறியிருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ. ஜனாதிபதியின் இந்தக் கூற்று கடும்போக்காளர்களுக்குச் சாதகமாக அமையும் எனவும் அவர் எச்சரித்திருக்கின்றார்.

நாட்டில் இனவாதத்தைத் தூண்டுவதற்கு ஒருபோதும் இடமளிப்பதில்லை என தெரிவிக்கும் ஜனாதிபதியும் அவரது அரசாங்கத் தரப்பினருமே இனவாதக் கருத்துக்களைப் பரப்பி வருகின்றனர் என ஜனாதிபதியின் மேற்படி யாழ்ப்பாணக் கருத்தை விமர்சித்திருக்கின்றார் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா. நாட்டுக்குள் மீண்டும் இனவாதத்தைத் தூண்ட வேண்டாம் என ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீமகா போதி மற்றும் ருவன்வெலிசாயவைக் கடந்து பௌத்தர்கள் யாழ்ப்பாணத்திற்கு எடுத்துச் செல்வது வெறுப்பை அல்ல, அன்பையே என ‘சர்வ ஜன அதிகாரம்’ கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திலித் ஜயவீர தெரிவித்துள்ளார்.

“பௌத்தம் ஓர் உலகளாவிய தர்மம். அன்பைப் பரப்பும் தர்மம். இதில் வெறுப்புக்கு எங்கும் இடமில்லை. ஜனாதிபதி தனது வன்மமான இந்தக் கருத்தை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும். இது ஒரு வெறுப்புப் பேச்சு மற்றும் இனவாதக் கருத்தாகும். இக்கருத்தைத் திரும்பப் பெற்று, மன்னிப்புக் கோரி, நாட்டு மக்களுக்கு அறிவிக்க வேண்டிய பொறுப்பு ஜனாதிபதிக்கு உள்ளது.” - என்றார் அவர்.

இனவாத முரண்பாடுகளையும் களேபரங்களையும் ஏற்படுத்தக் காத்திருக்கும் தென்னிலங்கைப் பேரினவாத சக்திகளுக்கு யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க ஆற்றிய உரையின் இரண்டு வசனங்கள் ‘வெறும் வாய்க்கு அவல் கிடைத்த கதையாக’ மாறிவிட்டது. இனி என்ன, அதை வைத்தே இனவாதப் பதற்றத்தை ஊதி ஊதியே அவர்கள் பெருப்பித்து விடுவார்கள்....!



# வேலோடுமலை வேள்வி யாகம் சித்தாண்டி ஆலயத்தில் நாளை


சாதனைத் தமிழன் நாதஸ்வரச் சக்கரவர்த்தி ஈழ நல்லூர் பி.எஸ்.பால முருகன் பங்குபற்றும் - 210 சித்தர்களை வரவழைக்கும் - வேலோடுமலை வேள்வி யாகம் நாளை செவ்வாய்க்கிழமை நள்ளிரவில் மூலிகைக் குளியலுடன் நடைபெறவிருக்கிறது.

சித்தர்கள் குரல் அமைப்பின் ஆஸ் தான தலைவர் சிவசங்கர் ஜீ அதற்கான ஏற்பாடுகளைச் செய்துள்ளார்.

இலங்கையில் சித்தர்களின் ஆதி இருப்பிடம் எனக் கூறப்படும் மட்டக்களப்பு சித்தாண்டி வேலோடு மலை முருகன் ஆலயத்தில் இந்த உலகை ஆளுகின்ற 210 சித்தர்களை பூஜிக்க நாளை செவ் வாய்க்கிழமை அன்று இரவு வேள்வி யாகம் இடம்பெறவிருக்கிறது.

அங்கு இம்முறை உலகப்புகழ் பெற்ற நாதஸ்வர வித்துவான் பாலமுருகன் குழுவினரும் சித்தர்களின் குரல் அன் பர்களுடன் பயணிக்கின்றனர்.

நாளை செவ்வாய்க்கிழமை மாலை மூலிகை குளியலுடன் ஆரம்பமாகி, 18 சித்தர்கள் சந்நிதியில் சர்வ வல்லமை வாய்ந்த 210 சித்தர்கள் வேள்வி, வேல் பூஜை மற்றும் இரவு முழுவதும் "தபஸ்" என்னும் உயர்ந்த ஆழ்நிலை தியானங் களை செய்து சித்தர்களின் அருளை, பெற அனைத்து ஏற்பாடுகளும் செய்யப் பட்டுள்ளன என்று வேலோடுமலை தேவஸ்தான பீடாதிபதி தியாகராஜ சுவா




மிகள் தெரிவித்தார்.

சித்தர்களின் குரல் அமைப்பின் தலை வர் ஆதித்தன், துணைத்தலைவர் மனோகரன், போசகர் சிவாயநம மகேஸ் வரன் சுவாமிகள், சித்தர்களின் குரல் ஆஸ்தான ஊடகவியலாளர் விபுலமா- மணி சகாதேவராஜா ஆகியோரின் ஒழுங் கமைப்பில் மிக மிகச்சிறப்பாக இந் நிகழ்வு நடைபெறவிருப்பதாக தியாகராஜ சுவாமி கள் மேலும் தெரிவித்தார்.







# வல்லையில் தடம் புரண்டது கார் பயணிகள் மூவருக்குப் படுகாயம்

யாழ்ப்பாணத்திலிருந்து மந்திகை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த கார் அச்சுவேலி வல்லைப் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து அருகில் இருந்த பாலத்திலுள் தடம் புரண்டது. இதில் மூவர் படுகாயமடைந்தனர்.

கார் சேற்றில் புதைந்த நிலையில் அதில் பயணம் செய்த ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் பலத்த காயங்களுக்கு உள்ளாகினர். திருநெல்வேலி ஆடியபாதம் வீதியைச் சேர்ந்த தாயும் தந்தையும், மகளும் இக்காரில் அச்சமயம் பயணித்துளனர். மகளின் கால்கள் முறிவடைந்துள்ளன எனப் பொலிஸெ தெரிவித்தனர்.

காயமடைந்த மூவரும் மந்திகை ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.



# ஜனாதிபதி அநுரவின் யாழ்ப்பாணப் பேச்சு அடிப்படைவாதத்தை ஊக்குவிக்கின்றது!

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ காட்டம்

பௌத்த மதத் தலங்களை வழிபடுவது தொடர்பாக ஜனாதிபதி தெரிவித்த கருத்து அடிப்படைவாதத்தை ஊக்குவிப்பதாக அமைகின்றது என்று சீறியிருக்கின்றார் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ.

“போயா தினத்தில் “சில்” எடுப்பதற்காக ஜய ஸ்ரீமகா போதியைத் தாண்டியுள்ள வழிபாட்டு தலங்களுக்கு வழிபட வருகிறார்கள். இங்கு இருப்பது குரோதம் தான்” என்று அண்மையில் ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்க யாழ்ப்பாணத்தில் தெரிவித்திருந்தார்.அந்தக் கருத்தே அடிப்படைவாதத்தை ஊக்குவிப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ கூறியிருக்கின்றார். நேற்று ஊடகங்களுக்கு விசேட கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

நமது நாட்டின் அரசமைப்பில் கூறப்பட்டுள்ள உச்ச சட்டத்தின்படி, பௌத்த மதத்திற்கு விசேட ஸ்தானம் வழங்கப்பட்டுள்ளது. இதில் கூறப்பட்டுள்ளபடி, பௌத்தமதத்தைப்பாதுகாப்பதுபோலவே ஏனைய மதங்கள் மற்றும் கலாசாரங்களுக்கும் உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளது. இந்நாட்டின் இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாடு மற்றும் ஒற்றுமையை எப்போதும் பாதுகாத்துக் கொண்டு, சகோதரத்துவத்தையும் நல்லிணக்கத்தையும் ஊக்குவிக்கும் ஒரு திட்டத்தை அனைவரும் வகுத்து முன்னெடுத்துச் செல்ல வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

“போயாதினத்தில்“சில்”எடுப்பதற்காக ஜய ஸ்ரீமகா போதியை தாண்டியுள்ள வழிபாட்டு தலங்களுக்கு வழிபட வருகிறார்கள். இங்கு இருப்பது குரோதம் தான்” என்று அண்மையில் ஜனாதிபதி தெரிவித்திருந்தார். ஜனாதிபதியின் இந்த கூற்றை நான் நிராகரிக்கிறேன். நாடு முழுவதும் பரவிக் காணப்படும் பௌத்த மத வழிபாட்டுத் தலங்களில் வழிபட உரிமை காணப்படுகின்றன. இங்கு குரோததத்தை வைத்துக் கொண்டு மக்கள் வழிபட வருவதில்லை. நமது நாட்டில் பல பகுதிகளிலும் அமைந்து காணப்படும் புனித தலங்களில் வழிபடுவதற்காக மக்கள் பல்வேறு பிரதேசங்களுக்குச் செல்ல ஆசைப்படுகின்றனர். இன, மத பேதங்கள் இல்லாமல் பௌத்த மத விகாரைகளை வழிபடுகின்றனர். அவற்றை பார்வையிடுகின்றனர். வடக்கிலிருந்து மக்கள் கதிர்காமத்தை வழிபட வருகின்றனர். கிறிஸ்தவ கத்தோலிக்க ஆலயங்களுக்குச் சென்று மத நடவடிக்கைகளில் ஈடுபடும்போது கூட, வெறுப்பு உச்சத்தை எட்டும் என்று ஒருபோதும் நினைப்பதில்லை. ஒவ்வொரு இனத்திலும் சிறு தொகையிலான தீவிர போக்குகள் கொண்ட குழுக்கள் காணப்படுகின்றன. அவற்றுக்கு அங்கு இடமில்லை. பௌத்த மதத்தின்படி, நடுத்தரப் பாதையைப் பின்பற்றும் நமது நாட்டில் அடிப்படைவாதத்திற்கு இடமில்லை. அடிப்படைவாதத்தைஉருவாக்கும்இதுபோன்ற கருத்துக்களை வெளியிடக்கூடாது. எந்தப் பிரதேசமாக, எந்த மாகாணமாக இருந்தாலும், மத நடவடிக்கைகள் குரோதத்தை தூண்டும் என்று கூறுவது தவறாகும். ஜனாதிபதியின் இந்த கூற்றானது கடும்போக்காளர்களுக்கு சாதகமாக




அமையும் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

ஜனாதிபதிதலைமையிலானஅரசாங்கம் அரசமைப்பைப் புரிந்து கொள்ள வேண்டும். பௌத்த மதத்திற்கு வழங்கப்பட்ட தனித்துவமான மற்றும் முக்கிய இடத்திற்கு முரணான கருத்துக்களை வெளியிடக்கூடாது.

ஏனைய மதங்களையும் அவற்றின் கலாசாரங்களையும் பாதுகாக்க வேண்டும். இந்த ஒற்றுமையும் நல்லிணக்கமும் பாதுகாக்கப்படும் வகையில் நாம் நடந்த கொள்ள வேண்டும். இதனால் பாதுகாப்பான நாடு உருவாக்கும். இதன் மூலம் தேசிய பாதுகாப்பு உறுதிபடும் என்றார் அவர்.

நாட்டில் பிளவுகளுக்கு வழிவகுக்கும் விடயங்களை முன்னிலைப்படுத்தக் கூடாது. பெற்றோர்கள் குழந்தை பருவத்திலிருந்தே அனைத்து மதங்களையும் மதிக்க கற்றுக்கொடுத்திருப்பதால், நாம் அவற்றை மதித்து ஒழுக வேண்டும். இவற்றை அடிப்படையாகக் கொண்டு சமூக குரோதத்தையும் வெறுப்பையும் உருவாக்கி அரசியலில் அதனைப் பேணிக் கொள்வது சாத்தியமற்றது என்றும் எதிர்க்கட்சித் தலைவர் இங்கு மேலும் தெரிவித்தார்.



# நுவரெலியா மாவட்டத்தில் வெப்பக் காலநிலை

**(மஸ்கெலியா நிருபர்)**

கடந்த சில நாள்களாக மத்திய மலை நாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் பகலில் கடும் வெப்பமான வானிலை நிலவுகிறது.

இதன் காரணமாக மாலை 6 மணி முதல் காலை 8 மணி வரை அதிக குளிரான காலநிலை நிலவுகிறது.

மேலும் மத்திய மலைநாட்டில் நுவரெலியா மாவட்டத்தில் உள்ள அனைத்து நீர் தேக்கங்களின் நீர் மட்டம் குறைந்து வருகிறது.

குறிப்பாக மவுஸ்சாகலை நீர் தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட 10 அடி குறைந்து உள்ளது. அதே போல காசல்ரீ நீர்த்தேக்கத்தின் நீர் மட்டம் அதன் கொள்ளளவை விட 8 அடி குறைந்து உள்ளது. மற்றும் லக்சபான, பொல்பிட்டிய, நவலக்சபான, கலுகல, விமலசுரேந்திர ஆகிய நீர் தேக்கங்களின் நீர் மட்டம் குறைந்து வருகிறது.

குறிப்பாக நீர் மின் உற்பத்தி நிலையங்களுக்கு நீரை வழங்கும் பிரதான நீர் தேக்கங்கள் அமைந்துள்ள நுவரெலியா மாவட்டத்தில் கடந்த சில நாள்களாக கடும் வெப்பமான வானிலை நிலவுகிறது. தொடர்ந்து இவ்வாறு காலநிலை நிலவும் பட்சத்தில் இன்னும் நீர் தேக்கங்களின் நீர் மட்டம் குறைந்து செல்லும் வாய்ப்பு உள்ளது.

# போதைப்பொருள் குற்றவாளிகளுக்கு ஆலயச் செயற்பாடுகளில் இனித் தடை

## கட்டைக்காடு பங்குத்தந்தை வசந்தன் அடிகளார் அதிரடி





**(மரியசீலன் திலைக்ஸ்)**

யாழ்ப்பாணம் வடமராட்சி கிழக்கு கட்டைக்காடு பங்கில் போதை பொருள் கடத்தலில் ஈடுபடுபவர்களுக்கு கட்டைக்காடு கப்பலேந்தி மாதா ஆலய பங்குத்தந்தை வசந்தன் அடிகளார் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கட்டைக்காடு கப்பலேந்தி மாதா பங்குக்குட்பட்ட மக்கள் யாராவது போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டு குற்றம் நிரூபிக்கப்பட்டால் அவர்களுக்கு ஆலய செயற்பாடுகளில் இருந்து தடை விதிக்கப்படும்என்றுஅவர்எச்சரிக்கைவிடுத்துள்ளார்

கட்டைக்காடு கப்பலேந்தி மாதா ஆலயத்தில் நேற்று இடம்பெற்ற ஞாயிறு திருப்பலியின் போது இந்த விடயத்தை அவர் தெரிவித்துள்ளார்.

எமது தமிழ் இனம் திட்டமிட்டு போதைப் பொருளால் அழிக்கப்படுகின்றது.

தற்போது வட,கிழக்கில் போதைப் பொருள் தாக்கம் அதிகரித்து வருகிறது.

குறிப்பாக வடமராட்சி கிழக்கில் போதை பொருள் பாவனை அதிகரித்து வருகிறது.

வடமராட்சி கிழக்கு கடலில் அதிகளவான போதைப் பொருள் கடத்தல் சம்பவங்கள் இடம் பெற்று வருகின்றன.

இதனால் சிறுவர்கள் தொடக்கம் பெரியவர்கள் வரை பாதிக்கப்படுகின்றனர்.

போதைப் பொருளுக்கு அடிமையாகும் எமது இனத்தை மீட்க வேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கின்றோம்.

ஆகவே கட்டைக்காடு கப்பலேந்தி மாதா பங்குக்குட்பட்ட பொதுமக்கள் யாராவது போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டு அவர்களுடைய குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஆலயத்தின் செயற்பாடுகளில் தடை விதிக்கப்படும். என்று அவர் அதிரடியாக அறிவித்துள்ளார்.

போதைப் பொருளைக் கடத்தி குடும்பங்களைச் சீரழிக்கும் இந்தக் கொடூரமான செயற்பாடுகளில் இருந்து மக்கள் விடுபட வேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.




# வவுனியா பதிப்பகத்தினருடன் இணைந்து கைகோர்க்கும் இலங்கை பதிப்பக சங்கம்

(கி.வசந்தன்)

இலங்கை பதிப்பக சங்கம் வவுனியா பதிப்பகத்தார் கூட்டுறவு சங்கத்துடன் இணைந்து புதிய உத்திகளுடன் கூடிய கட்டமைப்பு ஒன்றினை உருவாக்கும் நோக்குடனான நிகழ்வு வவுனியாவில் இடம்பெற்றது.

வவுனியா கூட்டுறவு சம்மேளன மண்டபத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இலங்கை பதிப்பக சங்கத்தின் செயற்பாடுகள், பிராந்திய ரீதியில் உள்ள பதிப்பகத்தாருக்கான புதிய தொழில்நுட்ப உத்திகள், உலக சந்தையில் பதிப்பகத் திற்குள்ள கேள்வி, அதனை விரிவு படுத்துவதற்கான வழிவகைகள் தொடர்பில் தெளிவு படுத்தப்பட்டது. வவுனியா மாவட்ட பதிப்பகத்தார் எதிரகொள்ளும் சவால்கள், அவற்றுக்குக் காணக் கூடியதான தீர்வுகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

இந் நிகழ்வில் இலங்கை பதிப்பக சங்கத்தின் தலைவர் ஜனா ரத்னகுமார, உப தலைவர் நிசாந்த பெரேரா, வீரகேசரியின் நிறைவேற்றுப்பணிப்பாரும் சங்கத்தின் உபதலைவருமான எம். செந்தில்நாதன், சங்கத்தின் உறுப்பினர் தினேஷ் மேர்வின் உட்பட பலர் கலந்துகொண்டனர்.










# மட்டு. சந்திவெளியில் மோட்டார் குண்டு தண்டவாளத்திற்கு அருகாமையில் மீட்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு சந்திவெளி பொலிஸ் பிரிவிலுள்ள வெட்டாறு சோலை பகுதியில் ரயில் தண்டவாளத்திற்கு அருகில் கைவிடப்பட்டிருந்த 61 மில்லி மீற்றர் ரக மோட்டார் குண்டு ஒன்றை நேற்று ஞாயிற்றுக்கிழமை தாங்கள் மீட்டுள்ளனர் என சந்திவெளி பொலிஸார் தெரிவித்தனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றிற்கு அமைய அந்தொ பகுதியில் கைவிடப்பட்டிருந்து மோட்டார் குண்டை விசேட அதிரடிப்படையின் குண்டு செயலிழக்கும் பிரிவினரின் உதவியுடன் மீட்டுள்ளனர்.

மீட்கப்பட்ட குண்டை வெடிக்க வைப்பதற்கு நீதிமன்ற உத்தரவை பெறும் நடவடிக்கையைத் தாங்கள் முன்னெடுத்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை சந்திவெளி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.








# ரெலோவின் மன்னார் மாவட்டச் செயலராக நகர சபையின் தலைவர் டானியல் வசந்தன்

(மன்னார் நிருபர்)

தமிழீழ விடுதலை இயக்கத்தின் (ரெலோ கட்சியின்) மன்னார் மாவட்ட செயலாளராக மன்னார் நகர சபையின் தவிசாளர் டானியல் வசந்தன் மீண்டும் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தமிழீழ விடுதலை இயக்கத்தின் மன்னார் நிர்வாகிகள் தெரிவு நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கட்சியின் தலைவர்,வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தலைமையில் மன்னார் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இதன் போது கட்சியின் முக்கியஸ்தர்கள் மற்றும் மாவட்ட குழு உறுப்பினர்கள் எனப் பலர் இடம் பெற்றது.

இதன் பேகாது தமிழீழ விடுதலை இயக்கம் ரெலோ கட்சியின் மன்னார் மாவட்ட செயலாளர் தெரிவு இடம்பெற்றது.

கட்சியின் முன்னாள் செயலாளரும்,மன்னார் நகர சபையின் தவிசாளருமான டானியல் வசந்தன் அதிகூடிய வாக்குகளினால் கட்சியின் மாவட்டச் செயலாளராக தேர்வு செய்யப்பட்டார்.

அதனை தொடர்ந்து கட்சியின் உப மாவட்ட செயலாளராகக் கட்சியின் உறுப்பினர் அருள்ராஜ் ஜஸ்ரின் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டார்.

அதனை தொடர்ந்து கட்சியின் மாவட்ட நிர்வாக குழு உறுப்பினர்களாக 15 பேர் தேர்வு செய்யப்பட்டனர்.




# கசிப்பு வியாபாரியைக் கைது செய்ய விடாது ரகளை செய்து பொலிஸாரைத் தாக்கிய 3 பெண்கள் உட்பட அறுவர் கைது!

## மட்டக்களப்பு நரிப்பு தோட்டத்தில் சம்பவம்

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு ஆயித்தியமலை பிரதேசத்தில் சட்டவிரோத கசிப்பு வியாபாரியை கைது செய்ய முற்பட்ட பொலிஸாரைத் தாக்கி, கசிப்பு வியாபாரியை கைது செய்ய விடாது தடுத்து, கைகலப்பில் ஈடுபட்டு, வியாபாரியைத் தப்பி ஓட வைத்து, எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் 3 பெண்கள் உட்பட 6 பேரை நேற்று ஞாயிற்றுக்கிழமை தாங்கள் கைது செய்துள்ளனர் என ஆயித்தியமலை பொலிஸார் தெரிவித்தனர்.

ஆயித்தியமலை பொலிஸ் பிரிவிலுள்ள நரிப்புதோட்டம் பிரதேசத்தில் சட்டவிரோதமாக கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் வீடு ஒன்றை நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை 4.30 மணியளவில் பொலிஸார் முற்றுகையிட்டனர். வியாபாரத்தில் ஈடுபட்டு கொண்டிருந்த 62 வயதுடையவரை 180 மில்லிகிராம் கசிப்புடன் கைது செய்து கொண்டு செல்வதற்கு முயற்சித்த போது அவரின் உறவினர்களான பெண்கள் உட்பட்ட குழுவினர் பொலிஸாரைத் தள்ளி வீழ்த்தி தடுத்து கைகலப்பில் ஈடுபட்டனர் என்றும், வியாபாரி அங்கிருந்து தப்பி ஓடியுள்ளார் என்றும் கூறப்படுகின்றது.

இதனையடுத்து சம்பவ இடத்திற்கு மேலதிக பொலிஸார் வரவழைக்கப்பட்ட நிலையில் பொலிஸாருக்கு எதிராக எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் 15 பேர் கொண்ட குழுவினர் ஈடுபட்டனர். இதை அடுத்து பொலிஸெ அவர்களை வீடியோ படம் எடுத்துவிட்டு அங்கிருந்து விலகிச் சென்றனர்.

இந்த நிலையில் பொலிஸாருடன் கைகலப்பில் ஈடுபட்ட நபர் அங்கிருந்து கரடியனாறு பகுதிக்குள் தப்பி ஓடிய நிலையில் அவரை கரடியனாறு பொலிஸார் சனிக்கிழமை இரவு கைது செய்தனர்.

இதனை தொடர்ந்து பொலிஸாருடன் கைகலப்பில் ஈடுபட்டு கடமையை செய்ய விடாது தடுத்தமை மற்றும் சட்டவிரோத கசிப்பு வியாபாரத்துக்கு உடந்தையாக இருந்தமை ஆகிய குற்றச்சாட்டுகளின் கீழ் 3 பெண்கள் உட்பட 6 பேரை நேற்று ஞாயிற்றுக்கிழமை பொலிஸார் கைது செய்தனர்.

அந்த 6 பேரையும் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆயித்தியமலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.










# யாழில் அநுர அரைக்கால் சட்டையுடன் நடைப்பயிற்சி அதுவும் கூட மகிழ்ச்சிதரும் செய்தியாக மாறுகின்றது!

## போகப் போக விடயம் தெரியவரும் என்கிறார் சாணக்கியன்

(வாலகிருஸ்ணா)

யாழ்ப்பாணத்தில் ஜனாதிபதி அரைக்காட்சட்டையுடன் நடைப்பயிற்சி செய்கின்றார் என்பது தமிழ் மக்களுக்கு கிழ்ச்சியைதரும் செய்தியாக மாறிக் கொண்டிருக்கும் காலப்பகுதியில், சில விடயங்கள் போகப்போகத்தான் தெளிவாகத் தெரியவரும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு களுவாஞ்சிகுடி நியூ ஒலிம்பிக் விளையாட்டுக் கழகத்தின் ஏற்பாட்டில் நந்தவனம் முதியோர் இல்லத்தில் ‘நந்தவனத்தில் ஓர் நாள்’என்னும் தொனிப்பொருளில் தைப்பொங்கல் கொண்டாட்டம் நேற்று நடைபெற்றது.

நந்தவனம் முதியோர் இல்லத்தில் உள்ள முதியவர்களை மகிழ்ச்சிப்படுத்தும் வகையிலும் பொங்கலைச் சிறப்பிக்கும் வகையிலும் இந்த நிகழ்வு நடைபெற்றது.

நியூ ஒலிம்பிக் விளையாட்டுக்கழகத்தின் கழக தலைவர் த.சத்தியசீலன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் இரா.சாணக்கியன் பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்தார்.

இந்த நிகழ்வில் மண்முனை தென் எருவில் பற்று பிரதேசசபையின் தவிசாளர் மே.வினோராஜ், சிவஸ்ரீ பத்மநிலோஜ சர்மா குருக்கள், களுவாஞ்சிகுடி நகர தலைவர் அ.கந்தவேள், கழகத்தின் முக்கியஸ்தர்கள், முதியோர் இல்ல நிர்வாகிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது பொங்கல் படைக்கப்பட்டு விசேட வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன. மாணவர்கள்,முதியவர்களின் பல்வேறு கலை நிகழ்வுகளும் நடைபெற்றன.

இந்த நிகழ்வில் சிறுவர்கள், பாடல் பாடி முதியவர்களுடன் நடனமாடி அவர்களை மகிழ்வித்தமை விசேட அம்சமாகும்.

இதன்போது கருத்து தெரிவித்த நாடாளுமன்ற உறுப்பினர் சாணக்கியன் –

நான் நாடாளுமன்ற உறுப்பினராக வந்தபிறகு களுவாஞ்சிகுடிப் பகுதியில்

என்னால் முடிந்த பல வேலைத்திட்டங்களை முன்னெடுத்துள்ளேன். கடந்த ஆட்சிக்காலத்தில் இருந்த சில அரச அதிகாரிகளும் எமது வேலைத்திட்டத்திற்கு தடையாக இருந்தார்கள். பல்வேறு வேலைத்திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதி திருப்பி அனுப்பப்பட்ட நிலைமைகள் கடந்த காலத்திலிருந்தது.

நாங்கள் இந்த மாவட்டத்தில் பல்வேறு வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவேண்டும். இந்த அரசாங்கத்தைப் பொறுத்த வரையில் இந்த ஜனாதிபதி சின்ன காற்சட்டையினை போட்டுக் கொண்டு நடைப்பயிற்சிக்கு செல்கின்றார் என்பதும் தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சியை தரும் ஒரு செய்தியாக மாறிக் கொண்டிருக்கின்ற காலப்பகுதியில் சில விடயங்கள் போகப்போகத்தான் எங்களுக்கு தெளிவாகத் தெரியவரும்.

இதேபோன்று இந்த களுவாஞ்சிகுடி பகுதியில் மாற்றுக்கட்சிகளிலிருந்து விமர்சிப்பவர்களிடம் ஒருவேண்டுகோளை முன்வைக்கின்றேன். நீங்கள் என்னை விமர்சிப்பதனால் எனக்கு எந்த பாதிப்பும் ஏற்படப்போவதில்லை.முடிந்தளவு அனைவரும் இணைந்து பயணிக்க முன்வருமாறு கேட்டுக்கொள்கின்றேன். – என தெரிவித்தார்.













# தேசிய மாணவர் சிப்பாய் படையணியின் வருடாந்த விளையாட்டுப் போட்டி நிகழ்வு










தேசிய மாணவர் சிப்பாய் படையணியின் 2025ஆம் ஆண்டுக்கான வருடாந்த விளையாட்டுப் போட்டியின் இரண்டாம் நாள் நிகழ்வுகள், நேற்று ஞாயிற்றுக்கிழமை மாலை யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்றன.

இந்நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

தேசிய மாணவர் சிப்பாய் படையணியின் பணிப்பாளர் மேஜர் ஜெனரல் ஏ.பி. கே.பிரேமதிலக தலைமையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மதியம் ஆரம்பமான இப்போட்டிகளின் தொடர்ச்சியாக, நேற்று இரண்டாம் நாள் நிகழ்வுகள் ஆளுநர் தலைமையில் நடைபெற்றன.

விளையாட்டரங்குக்கு வருகை தந்த ஆளுநரை, தேசிய மாணவர் படையணியின் அதிகாரிகள் சம்பிரதாயபூர்வமாக வரவேற்றனர். அதனைத் தொடர்ந்து அணிவகுப்பு மரியாதையை ஆளுநர் பார்வையிட்டார்.

மாணவர் படையணியின் விளையாட்டுத் திறன்களை வெளிப்படுத்தும் வகையில் பல்வேறு போட்டிகள் இதன் போது நடைபெற்றன.

இந்நிகழ்வில் தேசிய மாணவர் படையணியின் உயர் அதிகாரிகள், பயிற்றுவிப்பாளர்கள், பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் எனப் பெருந்திரளானோர் கலந்துகொண்டிருந்தனர்.

# குறுகிய அரசியல் நோக்கங்களை விடுத்து பொருளாதாரத்தில் கவனம் செலுத்துங்கள்

## ஜனாதிபதியிடம் ஐக்கிய மக்கள் சக்தி வலியுறுத்து

குறுகிய அரசியல் நோக்கங்களுக்காக வடக்கிற்கு சென்று மதங்களை அடிப்படையாகக் கொண்ட கருத்துக்களை வெளியிடுவதைத் தவிர்த்து, நாட்டின் பொருளாதாரம், அபிவிருத்தியில் கவனம் செலுத்துமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை வலியுறுத்துகிறேன்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.

குருணாகலில் நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"கல்வி சீர்திருத்தங்கள் தொடர்பில் சரியான நிலைப்பாடு என்ன என்பது அரசாங்கத்துக்கும் தெரியவில்லை. ஒருபுறம் பிரதமர் ஹரிணி அமரசூரிய கல்வி சீர்திருத்தங்கள் அவ்வாறே முன்னெடுத்துச் செல்லப்படும் என்று கூறுகின்றார். மறுபுறம் அதற்கு எதிராக ஆளுந்தரப்பினரே கருத்துக்களையும் முன்வைக்கின்றனர். தனிப்பட்ட நபர்களின் தேவைக்காக அன்றி, எதிர்கால முன்னேற்றத்துக்காகவே கல்வி சீர்திருத்



தங்கள் முன்னெடுக்கப்பட வேண்டும்.

ஜனாதிபதி, பிரதமர், அமைச்சரவை பேச்சாளர் மற்றும் அமைச்சர்கள் என அனைவரும் இது குறித்த அரசாங்கத்தின் நிலைப்பாட்டை ஒருமித்து வெளிப்படுத்த வேண்டும். அரசாங்கத்தின் கல்வி சீர்திருத்தக் கொள்கை என்ன என்பதை தெளிவாக நாட்டுக்கு வெளிப்படுத்த வேண்டும். எவ்வாறிருப்பினும் ஜனாதிபதி இவை தொடர்பில் கவனத்தில் கொள்ளாமல் அவர் வேறொரு பாதையில் சென்று கொண்டிருக்கின்றார்.

வடக்கிற்கு சென்றுள்ள ஜனாதிபதி தனது அரசியல் நோக்கத்துக்காக வாக்குகளை அடிப்படையாகக் கொண்டு மதங்களை முன்னிலைப்படுத்தி கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றார். இவ்வாறான விடயங்களை கைவிட்டு, பொருளாதாரம் நாட்டின் அபிவிருத்தியில் ஜனாதிபதி கவனம் செலுத்த வேண்டும். தற்போது நாளுக்கு நாள் டொலருக்கு நிகராக ரூபாவின் பெறுமதி வீழ்ச்சியடைந்து வருகிறது. இவ்வாறான சிக்கல்கள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்துவதாகத் தெரியவில்லை.

தரம் 6 ஆங்கில பாட நூலில் உள்ளடக்கப்பட்ட இணையதள முகவரி மாத்திரம் இங்கு பிரச்சினையல்ல. அரசாங்கம் அறிமுகப்படுத்தியிருக்கின்ற முழு கல்வி சீர்திருத்தமுமே பிரச்சினைக்குரியவைதான். பல்கலைக்கழக பேராசியர்கள் கூட இது தொடர்பில் பரந்துபட்டளவில் ஆராய்ந்து தமது எதிர்ப்புக்களை வெளியிட்டுள்ளனர். எனவே அவர்களுடனும் பேச்சுவார்த்தைகளை முன்னெடுத்து சீர்திருத்தங்களில் மாற்றங்களை ஏற்படுத்துமாறு வலியுறுத்துகின்றோம்."– என்றார்.

# இனவாதத்தை மீண்டும் தூண்ட வேண்டாம்: ஹர்ஷன ராஜகருணா எம்.பி. கோரிக்கை

"நாட்டில் இனவாதத்தை தூண்டுவதற்கு ஒருபோதும் இடமளிப்பதில்லை என தெரிவிக்கும் ஜனாதிபதியும் அரசாங்கமுமே இனவாத கருத்துக்களை பரப்பி வருகின்றன. அதனால் நாட்டுக்குள் மீண்டும் இனவாதத்தை தூண்ட வேண்டாம் என ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தை கேட்டுக்கொள்கிறோம்."

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தி நாடாளுமன்ற உறுப்பினர் ஹர்ஷன ராஜகருணா தெரிவித்தார்.

ஜனாதிபதி வடக்குக்கு சென்று தெரிவித்திருந்த கருததுக்கள் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்,

"ஜனாதிபதி யாழ்ப்பாணத்தில் தெரிவித்த கருத்து தொடர்பில் மக்கள் மத்தியில் சர்ச்சை நிலை ஏற்பட்டிருக்கிறது. அதனால் மீண்டும் இனவாத்தை தூண்டாமல் நாங்கள் இலங்கையர்களாக ஒன்றாக எழுந்திருக்க வேண்டும்.

தெற்கில் ஒருவிதமாகவும் வடக்குக்கு சென்று அதனை வேறு விதமாகவும் சொல்லி, நாட்டு மக்களை ஏமாற்றுவதை தற்போதாவது நிறுத்தவேண்டும் என ஜனாதிபதியிடம் கேட்டுக்காள்கிறோம்.

வடக்குக்கு சென்று பாரியளவில் வாக்குறுதிகளை வழங்கிவிட்டு, அதனை



தெற்கில் விமர்சிக்கின்றனர். அதேநேரம் தமிழ், சிங்களம் முஸ்லிம் என பார்க்காமல் நாங்கள் இலங்கையர்களாக ஒன்றிணைந்து செயற்பட வேண்டும்.

இனவாதத்தை தூண்டுவதில்லை என அரசாங்கம் தெரிவித்துவருகின்ற போதும். ஜனாதிபதியும் அரசாங்கமுமே இனவாதத்தை தூண்டிவருகிறது. அதனால் மீண்டும் இனவாதத்தை தூண்ட வேண்டாம் என தயவாக கேட்டுக்கொள்கிறோம்.

அத்துடன் எமது நாட்டு பௌத்தர்கள் நாட்டில் இருக்கும் எந்த விகாரைக்கு வழிபடச் சென்றாலும் அவர்கள் வைராக்கியத்துடன் செல்வதில்லை. ஜனாதிபதியே வைராக்கியத்துடன் செல்கிறார். வைராக்கியத்தை பரப்புவதும் ஜனாதிபதியும் அவரது சீடர்களுமாகும்.

நாங்கள் நாகதீபம், சிறிமாபோதி, களனி விகாரைக்கு செல்வது வழிபடுவதற்காகும். மாறாக வைராக்கியத்துடன் யாரும் செல்வதில்லை. வைராக்கியத்தை பரப்ப வேண்டும் என்றால் நாகதீபத்துக்கு செல்ல தேவையில்லை, கொழும்பில் இருந்து பரப்ப முடியும்.

ஜனாதிபதி, ஆட்சிக்கு வரும் முன்னர் தெரிவித்த எதனையும் தற்போது செயற்படுத்துவதில்லை. தலதா மாளிகைக்கு செல்லும்போது ஊடகங்களை அழைத்துச்செல்வதில்லை என்றே தெரிவித்திருந்தார்.

ஊடகங்கள் இல்லாமலே நாங்கள் தலதா வழிபடுவதாக தெரிவித்திருந்தார். ஆனால் தற்போது அவ்வாறா இடம்பெறுகிறது? ஊடகங்களை அழைத்துக் கொண்டே மத வழிபாடுகளுக்கு செல்கிறார்.

ஹெலிகொப்டரில் செல்வதில்லை என தெரிவித்தார்கள். ஹெலிகொப்டர் இரண்டு எடுத்துச் செல்வது, பாய்வதற்காக என அன்று கேட்டார்கள். ஆனால் இன்று ஹெலிக் கொப்டர் இரண்டு எடுத்துச்செல்கிறார்கள்.

அதனால் இவர்கள் ஆட்சிக்கு வரும் முன்னர் தெரிவித்த எதனையும் செயற்படுத்துவதாக இல்லை என்பதை நாட்டு மக்கள் புரிந்துகொண்டுள்ளனர்."

– என்றார்.





# சாரதி அனுமதிப் பத்திர விநியோகம் மார்ச் மாதத்துக்குள் நிறைவடையும்

அச்சிடுவதற்கு நிலுவையில் உள்ள சாரதி அனுமதிப் பத்திர அட்டைகளை, அச்சிட்டு விநியோகிக்கும் நடவடிக்கை எதிர்வரும் மார்ச் மாதத்துக்குள் நிறைவடையும் என மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களம் அறிவித்துள்ளது.

அதன்படி, இதுவரை சாரதி அனுமதிப் பத்திர அட்டைகளைப் பெற்றுக் கொள்ளாத 5 லட்சம் சாரதிகளுக்கான அச்சிட்ட அட்டைகள் அஞ்சல் ஊடாக அனுப்பி வைக்கப்படவுள்ளன என திணைக்களத்தின் ஆணையாளர் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார்.

முன்னதாக, அனுமதிப் பத்திரத்தை அச்சிடும் அட்டைகளுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடு காரணமாக, நிரந்தர அனுமதி அட்டைகளை வழங்குவது தற்காலிகமாக இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

தேவையான அட்டைகள் தற்போது இறக்குமதி செய்யப்பட்ட அச்சிடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதால், எதிர்வரும் மார்ச் மாதத்தில், நிரந்தர சாரதி அனுமதிப் பத்திரங்களை பெற்றுக்கொள்ள முடியும் என மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் கமல் அமரசிங்க தெரிவித்துள்ளார்.




# துறைமுகத்தில் தேங்கியுள்ள 1,500 உப்புக் கொள்கலன்கள்

சுமார் 1,500 இற்கும் மேற்பட்ட உப்பு கொள்கலன்கள் இலங்கை துறைமுகங்களில் தேங்கியுள்ளன என தெரிவிக்கப்படுகிறது.

இறக்குமதி செய்ய அனுமதிக்கப்பட்ட காலம் கடந்த பின்னரே, இந்த கொள்கலன்கள் இலங்கைக்கு வந்துள்ளன என இலங்கை சுங்கம் மற்றும் வர்த்தக அமைச்சு என்பன குறிப்பிட்டுள்ளன.

கடந்த 2025 மே மாதம் 15 ஆம் திகதி முதல் ஜூன் மாதம் 10 ஆம் திகதி வரை மாத்திரமே உப்பு இறக்குமதிக்கு அனுமதி வழங்கிய வர்த்தமானி வெளியிடப்பட்டது.

இதனை இறக்குமதியாளர்கள் மீறியதால், அந்த சரக்குகளை விடுவிக்க முடியாது என்றும், அவை கட்டாயமாக மீண்டும் ஏற்றுமதி செய்யப்பட வேண்டும் என்றும் கூறியுள்ளன.

இறக்குமதியாளர்கள் சரக்குகளைப் பெற்றுக்கொள்ளாததால் அவை கைவிடப்பட்ட சரக்குகளாகக் கருதப்படுகின்றன.

அத்துடன், மீண்டும் ஏற்றுமதி செய்வதற்கான அதிக செலவு காரணமாக இறக்குமதியாளர்கள் அதற்கு முன்வரவில்லை என இலங்கை சுங்கம் தெரிவித்துள்ளது.

அதனால், சுங்க வரி அல்லது துறைமுகக் கட்டணங்களையும் வசூலிக்க முடியாது உள்ளதாகவும் இலங்கை சுங்கம் குறிப்பிட்டுள்ளது.



# புறாக்கள் வளர்ப்பதில் முரண்பாடு; தாக்குதலுக்கு உள்ளாகி ஒருவர் பலி

புறாக்கள் வளர்ப்பது தொடர்பாக ஏற்பட்ட முரண்பாட்டில், கூர்மையான ஆயுதத்தால் தாக்கப்பட்டு நபர் ஒருவர் உயிரிழந்துள்ளார் என பேலியகொடை பொலிஸ் தெரிவித்துள்ளது.

பேலியகொடை பொலிஸ்க்கு உட்பட்ட மீகஹவத்த பகுதியில் இரு தரப்பினரிடையே ஏற்பட்ட தனிப்பட்ட மோதலில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

தாக்குதலில் படுகாயமடைந்த நபர் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது அவர் ஏற்கனவே உயிரிழந்துள்ளார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

உயிரிழந்தவர் வத்தளை, ஒலியமுல்ல பகுதியைச் சேர்ந்த 38 வயதுடையவர் ஆவார்.

இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் காயமடைந்த நிலையில் கொழும்பு தேசிய மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

மேலதிக விசாரணைகளை பேலியகொடை பொலிஸ் மேற்கொண்டு வருகின்றது.





# ரமழான் நோன்பு காலத்தில் அரச ஊழியர்களுக்கு விசேட வேலைநேர மாற்றம்: சுற்றறிக்கை வெளியீடு




ரமழான் காலத்தில் அரச உத்தியோகத்தர்கள் மத வழிபாடுகளில் ஈடுபடுவதற்கான விசேட சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

பொது நிர்வாகம், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்ற அமைச்சின் செயலாளர் அலோக பண்டாரவினால் இந்த சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அதன்படி, எதிர்வரும் பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி முதல் மார்ச் மாதம் 21 ஆம் திகதி வரை ரமழான் பண்டிகைக்கான நோன்பு நோற்கப்படுகின்றது.

இதன்போது, இஸ்லாமியர்கள் தங்களது வழிபாடுகளில் ஈடுபடுவதற்கு ஏற்ற வகையில், தொழில் நேரத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

இதேவேளை, ரமழான் பண்டிகைக்கு 14 நாள்களுக்கு முன்னர் தகுதியான ஊழியர்களுக்குப் பண்டிகைக்கான முன்பணம் வழங்க வேண்டும் எனவும் அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# வங்கிக் கணக்குகளைக் குறிவைக்கும் புதிய மோசடி தொடர்பில் எச்சரிக்கை

சமூக வலைதளங்கள் மற்றும் தொலைபேசி அழைப்புகளைப் பயன்படுத்தி பொதுமக்களின் வங்கிச் கணக்குகளிலிருந்து மிக நுணுக்கமான முறையில் பணம் திருடப்படுவது குறித்து பொலிஸ் ஊடகப் பிரிவு பொதுமக்களுக்கு அவசர எச்சரிக்கை விடுத்துள்ளது.

சமீபகாலமாக மோசடியாளர்கள் பல்வேறு போலி வாக்குறுதிகளை அளித்து பொதுமக்களை ஏமாற்றி வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறிப்பாக, சமூக வலைதளங்கள் மூலம், வேலைவாய்ப்புகளைப் பெற்றுத் தருவதாகக் கூறுதல் மற்றும் அதிர்ஷ்ட லாபச்சீட்டுகள் அல்லது பரிசுப் பொருள்கள் கிடைத்துள்ளதாக கூறி பொதுமக்களைத் தொடர்புகொள்கின்றனர்.

இதன்போது, தங்களை வங்கி அதிகாரிகள் என அறிமுகப்படுத்திக்கொண்டு, வங்கிச் கணக்கு விபரங்கள், ஒருமுறை பயன்படுத்தும் கடவுச்சொற்கள் மற்றும் இரகசியக் குறியீடுகளைப் பெற்றுக் கொண்டு கணக்குகளிலுள்ள பணத்தைச் சூறையாடுகின்றனர்.

அத்துடன், இணையத்தில் பரப்பப்படும் சந்தேகத்திற்கிடமான இணைப்புகள் மற்றும் கியூ.ஆர் குறியீடுகளைப் பயன்படுத்துவதன் மூலமும் இந்த திருட்டுகள் அரங்கேறுகின்றமை அவதானிக்கப்பட்டுள்ளது.

மிரிஹான விசேட குற்ற விசாரணை பிரிவினரால் அண்மையில் முன்னெடுக்கப்பட்ட விசாரணைகளின் போது, மோசடியாளர்கள் தங்களை பொலிஸ் அதிகாரிகள் என அடையாளப்படுத்திப் பேசுகின்றமை கண்டறியப்பட்டுள்ளது.

இவ்வாறான மோசடிகள் தொடர்பில் பாதுக்கை உள்ளிட்ட பல பொலிஸ் நிலையங்களுக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன.

இவ்வாறான நிதி மோசடிகளிலிருந்து தங்களைப் பாதுகாத்துக்கொள்ள பொதுமக்கள் பின்வரும் நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளனர்.

உத்தியோகபூர்வமான மற்றும் உறுதிப்படுத்தப்பட்ட சமூக வலைதளப் பக்கங்களை மட்டுமே நம்புங்கள்.

வங்கி விபரங்கள், அடையாள அட்டை இலக்கம், கடவுச்சொற்கள், ஓ.ரி.பி. இலக்கங்கள் அல்லது தனிப்பட்ட புகைப்படங்களை அறியாத நபர்களுக்கு வழங்க வேண்டாம்.

சந்தேகத்திற்கிடமான இணைய இணைப்புகளை கிளிக் செய்வதையோ அல்லது கியூ.ஆர் குறியீடுகளை ஸ்கேன் செய்வதையோ தவிர்க்கவும்.

எவருக்காவது பணம் அனுப்பும் முன்னர் அவர்களின் அடையாளத்தை உறுதிப்படுத்திக் கொள்ளவும்.

இவ்வாறான மோசடிகளுக்கு உள்ளாகும் பட்சத்தில், உடனடியாக குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் கணினி குற்ற விசாரணை பிரிவிடம் முறைப்பாட்டைப் பதிவு செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

மேலதிக தகவல்களுக்கு மிரிஹான விசேட குற்ற விசாரணை பிரிவை 011-2852556 அல்லது 075-3994214 ஆகிய இலக்கங்கள் ஊடாகத் தொடர்புகொள்ளுமாறு பொலிஸ் ஊடகப் பிரிவு அறிவுறுத்தியுள்ளது.

அத்துடன், பிரதிப் பணிப்பாளர் / நிதி மோசடி விசாரணைப் பிரிவு: 011 - 2300638, தனிப்பட்ட உதவியாளர் / நிதி மோசடி விசாரணைப் பிரிவு: 011 - 238137, நிலயப் பொறுப்பதிகாரி / நிதி மோசடி விசாரணைப் பிரிவு: 011 - 2381058 ஆகிய இலக்கங்களையும் தொடர்புகொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# கிணற்றுக்குள் வீழ்ந்து கைதி ஒருவர் மரணம்



காலி சிறைச்சாலை வளாகத்தில் உள்ள கிணற்றில் நீராடிக்கொண்டிருந்த கைதி ஒருவர், கிணற்றுக்குள் வீழ்ந்து கிடந்த நிலையில் அண்மையில் மீட்கப்பட்டுள்ளார்.

மேற்படி கைதி பின்னர் அங்கிருந்து மீட்கப்பட்டு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார்.

எனினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார் என அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

உயிரிழந்தவர் அக்மீமன பகுதியைச் சேர்ந்த 22 வயதுடைய இளைஞர் ஆவார்.

முன்னதாக, இவர் போதைப்பொருள் தொடர்பான குற்றச்சாட்டில் அக்மீமன பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார்.

கடந்த 15 ஆம் திகதி காலை சிறைச்சாலைக்குள் இருக்கும் கிணற்றில் இவர் நீராடிக்கொண்டிருந்தபோது கிணற்றுக்குள் வீழ்ந்துள்ளார்.

உடனடியாக மீட்கப்பட்ட அவர், சிறைச்சாலை மருத்துவமனை ஊடாக காலி கராபிட்டிய மருத்துவமனைக்கு மாற்றப்பட்டார்.

அங்கு தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்த அவர், நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

# சிறுவர்களுக்கு எதிரான கொடுமைகளுக்கு குரல் கொடுக்க முன்வராத சட்டத்தரணிகள்

## தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை தெரிவிப்பு



சிறுவர் துஷ்பிரயோகம் தொடர்பான வழக்குகளுக்காக, இலவச சேவையை வழங்குவதற்கு எந்தவொரு சட்டத்தரணியும் முன்வரவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வழக்குகளுக்காக, தன்னார்வமாக செயல்படும் சட்டத்தரணிகள் குழு ஒன்றை அமைப்பதற்கு தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபை கடந்த ஒரு வருடமாக சட்டத்தரணிகளுக்கு அழைப்பு விடுத்திருந்த நிலையில் இந்த தகவல் வெளியாகியுள்ளது.

சிறுவர்களின் உரிமைகளுக்காக சட்ட சேவைகளை வழங்குவதே இந்த சட்டத்தரணிகள் குழுவை அமைப்பதற்கான நோக்கம் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், அந்த குழுவின் சட்டத்தரணிகளாக செயற்படுவதற்கு சுமார் 10 ஆண்டுகளுக்கும் மேலான தொழில்முறை அனுபவம் இருக்க வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும், நீதிவான் நீதிமன்றம் அல்லது மேல் நீதிமன்ற வழக்குகளில் முன்னிலையாகிய அனுபவமும் அவசியம் என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சிறுவர்கள் தொடர்பான சேவைகளில் ஈடுபடும் போது ஏற்படும் அனைத்து தொழில்முறை செலவுகள் மற்றும் போக்குவரத்து செலவுகளை அந்த சட்டத்தரணிகளே ஏற்க வேண்டும் என்பதுடன், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகாரசபையுடன் இரகசிய ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்த நிபந்தனைகளின் அடிப்படையில், தன்னார்வ சேவையில் ஈடுபடுவதற்கு எந்தவொரு சட்டத்தரணியும் இதுவரை முன்வரவில்லை என தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை சுட்டிக்காட்டியுள்ளது.




# சட்டவிரோத பணப் பரிமாற்றங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் மத்திய வங்கி

பணமோசடி மற்றும் பயங்கரவாதத்திற்கு நிதியுதவி செய்தல் உள்ளிட்ட விடயங்களுக்கு எதிரான செயற்பாடுகளை இலங்கை மத்திய வங்கி வலுப்படுத்தியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கை மத்திய வங்கியின் உயர் அதிகாரி ஒருவரை மேற்கோள்காட்டி ஆங்கில ஊடகமொன்று இந்த செய்தியை வெளியிட்டுள்ளது.

இந்த செயற்பாடுகளுக்காக, சர்வதேச அரசுகளுக்கிடையேயான நிதி நடவடிக்கைகளுக்குரிய பணிக்குழுவுடன் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் ஒன்றை இலங்கை மத்திய வங்கி கைச்சாத்திட்டுள்ளதாக அந்த செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, இந்த நிதியியல் செயற்பாடுகளில், உள்நாட்டு இறைவரித் திணைக்களம், பொலிஸ், சட்ட மா அதிபர் திணைக்களம், கணக்காய்வாளர் நாயகம், அனைத்து வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள், கையூட்டல் ஒழிப்பு விசாரணை ஆணைக்குழு, இலங்கைச் சுங்கம், இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டு அதிகார சபை, குடிவரவு, குடியகல்வு திணைக்களம் ஆகியன இணைந்துள்ளன என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த புதிய முயற்சியினூடாக, சட்டவிரோத எல்லை கடந்த பண நகர்வுகளை தடுக்க முடியும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.



# இந்திய மொழிகளில் சிறந்த படைப்புகளுக்கு செம்மொழி இலக்கிய விருது வழங்கப்படும்

## முதல்வர் ஸ்டாலின் அறிவிப்பு



இந்திய மொழிகளில் தலைசிறந்த இலக்கியப் படைப்புகளுக்கு தமிழக அரசு சார்பில் 5 லட்சம் இந்திய ரூபா பரிசுத்தொகையுடன் ஆண்டுதோறும் செம்மொழி இலக்கிய விருது வழங்கப்படும் என முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

தமிழக அரசின் சார்பில் 4 ஆவது சென்னை பன்னாட்டு புத்தகத் திருவிழா சென்னையில் கடந்த 16 ஆம் திகதி தொடங்கி நேற்று நிறைவடைந்தது. நிறைவு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் உரையாற்றுகையில்,

“நமது மண்ணின் சிந்தனைகளும், எழுத்துகளும் உலகம் முழுவதும் பரவ வேண்டும். இலக்கியத்துக்கு எல்லைகள் கிடையாது. திருவள்ளுவரின் அறமும், இளங்கோ அடிகளின் காப்பியமும், பாரதியின் கவிதைகளும், பாரதிதாசனின் கருத்துகளும் உலகமெல்லாம் ஒலிக்க வேண்டும்.

அறிவைப் பகிர்ந்து கொள்வதற்கு மிகச் சிறந்த மாநிலம் தமிழகம். கீழடி முதல்பொருநை வரை கண்டெடுத்த தொல்லியல் சான்றுகள் மூலம் தமிழ்ச் சமூகத்தின் அறிவு மரபு எப்படிப்பட்டது என்பது புரியும். உலக நாடுகளின் சிறந்த படைப்புகளைத் தமிழில் கொண்டு வாருங்கள்.மனிதநேயம், சமூகநீதி பேசும் திராவிடக் கருத்தியல் இலக்கியங்களை உங்கள் நாட்டு மக்களுக்கு அறிமுகப்படுத்துங்கள்.

2025 ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருதுகள் இறுதி செய்யப்பட்ட நிலையில், மத்திய கலாச்சாரத் துறையின் தலையீட்டால், விருது அறிவிக்கும் நிகழ்ச்சி திடீரென ரத்து செய்யப்பட்டது. கலை இலக்கிய விருதுகளில்கூட அரசியல் குறுக்கீடுகள் செய்வது ஆபத்தானது. இப்படி ஒரு சூழலில், தமிழக அரசு ஆக்கப்பூர்வமாக எதிர்வினை ஆற்றவேண்டும் என்று பல்வேறு எழுத்தாளர்கள், கலை இலக்கிய அமைப்புகளைச் சார்ந்தோர் என்னிடம் கோரிக்கை விடுத்தனர். இது காலத்தின் தேவை என்று நாங்களும் உணர்ந்தே இருக்கிறோம்.

அதன்படி, குறிப்பிட்ட இந்திய மொழிகளில் வெளியாகும் தலை சிறந்த இலக்கியப் படைப்புகளுக்கு தமிழக அரசு சார்பில், ஆண்டுதோறும் தேசிய அளவிலான விருதுகள் வழங்கப்படும்.முதல்கட்டமாக,தமிழ்,தெலுங்கு, கன்னடம், மலையாளம், ஒடிசா, வங்காளம், மராத்தி ஆகிய மொழிகளில் வெளியாகும் தலைசிறந்த படைப்புகளுக்கு ஆண்டுதோறும் ‘செம்மொழி இலக்கிய விருது’ வழங்கப்படும். விருதுடன், தலா 5 லட்சம் இந்திய ரூபா பரிசுத்தொகையும் வழங்கப்படும்.

படைப்புகளின் இலக்கியத் தரத்தையும், வெளிப்படையான தேர்வு முறையையும் உறுதி செய்யும் விதமாக புகழ்பெற்ற எழுத்தாளர்கள், விருதாளர்கள் அடங்கிய குழு ஒவ்வொரு மொழிக்கும் தனியே அமைக்கப்படும்.” என்று தெரிவித்துள்ளார்.



# குடியரசு தினத்தை முன்னிட்டு பொலிஸ் கண்காணிப்பு தீவிரம்

குடியரசு தினத்தை முன்னிட்டு தமிழகம் முழுவதும் பாதுகாப்பு பணியில் ஒரு லட்சம் பொலிஸார் ஈடுபடுத்தப்பட உள்ளனர். மக்கள் அதிகம் கூடும் இடங்கள், கடலோரப் பகுதிகளில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்டுள்ளது.

குடியரசு தின விழா எதிர்வரும் 26 ஆம் திகதி கொண்டாடப்பட உள்ளது. அன்றைய தினம், டில்லியில் பிரதமர் மோடி முன்னிலையில், தேசியக் கொடியை குடியரசுத் தலைவர் திரவுபதி முர்மு ஏற்றுகிறார். சென்னையில் மெரினா கடற்கரை காமராஜர் சாலையில் முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் தமிழக ஆளுநர் ஆர்.என்.ரவி கொடியேற்றுகிறார்.

குடியரசு தின விழாவில் தீவிரவாதிகள் நாசவேலையில் ஈடுபட வாய்ப்பு உள்ளதாக உளவுப் பிரிவு பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது. எனவே, குடியரசு தின விழாவையொட்டி நாடு முழுவதும் பாதுகாப்பை பலப்படுத்த மத்திய உள்துறை அமைச்சகம் உத்தரவிட்டுள்ளது. பாதுகாப்பில் கூடுதல் கவனம் செலுத்துமாறு அறிவுறுத்தி, அனைத்து மாநில அரசுகளுக்கும் உள்துறை அமைச்சகம் கடிதம் அனுப்பியுள்ளது.

இந்த எச்சரிக்கையை தொடர்ந்து, தமிழகத்திலும் பொலிஸார் உஷார்படுத்தப்பட்டுள்ளனர். பஸ், ரயில், விமான நிலையங்கள், வழிபாட்டுத் தலங்கள், வணிக வளாகங்கள், திரையரங்குகள் என மக்கள் அதிகம் கூடும் இடங்களிலும், கடலோரப் பகுதிகளிலும் பாதுகாப்பு, கண்காணிப்பை அதிகரிக்க வேண்டும். இரவு நேரத்தில் வாகன சோதனையை தீவிரப்படுத்த வேண்டும். விடுதிகளில் சந்தேகத்துக்குரிய வகையில் யாரேனும் தங்கி உள்ளனரா என்பதை கண்காணிக்க வேண்டும் என்று பொலிஸாருக்கு பொறுப்பு டி.ஜி.பி. வெங்கடராமன் அறிவுறுத்தி உள்ளார்.

குடியரசு தின விழாவையொட்டி தமிழகம் முழுவதும் ஒரு லட்சம் பொலிஸார் பாதுகாப்பு, கண்காணிப்பில் ஈடுபடுகின்றனர்.

சென்னையில் பொலிஸ் ஆணையர் அருண் மேற்பார்வையில் 18 ஆயிரம் பொலிஸார் இப்பணியில் ஈடுபட உள்ளனர். குடியரசு தினவிழா நெருங்க நெருங்க, பொலிஸாரின் பாதுகாப்பு கெடுபிடி அதிகரிக்கும் எனத் தெரிகிறது.

# சென்னை விமான நிலையத்தில் ஐந்து அடுக்குப் பாதுகாப்பு அமுல்




குடியரசு தினத்தை முன்னிட்டு, சென்னை விமான நிலையத்தில் 5 அடுக்கு பாதுகாப்பு அமலப்படுத்தப்பட்டுள்ளது.

குடியரசு தினம் வரும் 26 ஆம் திகதி கொண்டாடப்படுகிறது. இதையொட்டி, நாடு முழுவதும் பாதுகாப்பு ஏற்பாடுகள் பலப்படுத்தப்பட்டுள்ளன. அதன்படி, சென்னை விமான நிலையத்தில் 5 அடுக்கு பாதுகாப்பு நடைமுறைக்கு வந்துள்ளது. இது வரும் 30 ஆம் திகதி வரை அமலில் இருக்கும். குறிப்பாக, 24, 25, 26 ஆகிய 3 நாள்களும் உச்சக் கட்டபாதுகாப்பாக 7 அடுக்கு பாதுகாப்பு முறை அமுல்படுத்தப்பட உள்ளது.

விமான நிலையத்துக்கு வரும் வாகனங்களை, பாதுகாப்பு படையினர் பிரதான நுழைவு வாயில் பகுதியிலேயே நிறுத்தி மோப்ப நாய் உதவியுடன் சோதனையிடுகின்றனர். தவிர, மெட்டல் டிடெக்டர்கள் மூலம் வெடிகுண்டு நிபுணர்களும் சோதனை செய்கின்றனர். விமான நிலைய வளாகம் முழுவதும் துப்பாக்கி ஏந்திய பொலிஸார் ரோந்து சுற்றி வருகின்றனர்.

வாகன நிறுத்தப் பகுதியில் நீண்ட நேரமாக நிற்கும் கார்கள், பைக்குகள் போன்ற வாகனங்களை வெடிகுண்டு நிபுணர்கள் தீவிரமாக சோதனை செய்கின்றனர். மத்திய தொழில் பாதுகாப்பு படை வீரர்கள், மோப்ப நாய்களுடன், விமான நிலையத்தின் அனைத்து பகுதிகள் மற்றும் விமானங்கள் நிற்கும் பகுதிகளில் கண்காணிப்பில் ஈடுபட்டு வருகின்றனர்.

விமானங்களுக்கு எரிபொருள் நிரப்பும் பகுதி, பார்சல் ஏற்றும்பகுதிகளிலும் கூடுதல் பாதுகாப்புஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. கூடுதலாக கண்காணிப்பு கேமராக்கள் அமைத்து, விமான நிலைய கட்டுப்பாட்டு அறையில் இருந்து 24 மணி நேரமும் கண்காணிக்கப்பட்டு வருகிறது.

பயணிகளுக்கு வழக்கமாக நடைபெறும் சோதனை மட்டுமின்றி, விமானத்தில் ஏறும்போது, மேலும் ஒரு முறை பாதுகாப்பு சோதனை நடத்தப்படுகிறது.

இதனால், உள்நாட்டு பயணிகள் ஒன்றரை மணி நேரம் முன்னதாகவும், சர்வதேச பயணிகள் மூன்றரை மணி நேரம் முன்னதாகவும் வருமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.



# ட்ரம்பை எதிர்க்கிறார் நெதன்யாகு; காசா அமைதி சபையால் சலசலப்பு

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் உருவாக்கியுள்ள காசா அமைதி சபை தொடர்பில் இஸ்ரேலிய பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு தனது எதிர்ப்பை வெளியிட்டுள்ளார்.

ட்ரம்ப் நிர்வாகம் அமைத்துள்ள காசா நிர்வாகக் குழுவில், துருக்கி மற்றும் கட்டார் ஆகிய நாடுகளின் பிரதிநிதிகள் சேர்க்கப்பட்டுள்ளதே நெதன்யாகுவின் கோபத்திற்கு முக்கிய காரணமாகும் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இது தொடர்பில் இஸ்ரேலிய பிரதமரின் அலுவலகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

இந்த அமைதிச் சபையின் உறுப்பினர்கள் குறித்து இஸ்ரேலுடன் முன் கூட்டியே ஆலோசிக்கப்படவில்லை எனவும் இந்த முடிவு இஸ்ரேலின் பாதுகாப்புக் கொள்கைக்கு எதிரானது எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஹமாஸ் அமைப்புடன் நெருங்கிய தொடர்புடைய துருக்கி மற்றும் கட்டார் போன்ற நாடுகள் காசாவின் நிர்வாகத்தில் ஈடுபடுவது ஹமாஸ் மீண்டும் வலுப்பெற வழிவகுக்கும் என இஸ்ரேல் அஞ்சுகிறது.

நெதன்யாகுவின் அமைச்சரவையில் உள்ள தீவிர வலதுசாரி அமைச்சர்களான இத்தாமர் பென் கிவிர் மற்றும் பெசலெல் ஸ்மோட்ரிச் ஆகியோரும் இந்தத் திட்டத்தைக் கடுமையாக விமர்சித்துள்ளனர்.

“ஹமாஸை உயிருடன் வைத்திருக்க உதவிய நாடுகள், அந்த இடத்திற்கு மாற்றாக வர முடியாது.” என்று அவர்கள் குறிப்பிடுகின்றனர்.

இஸ்ரேலின் இந்த எதிர்ப்பிற்குப் பதிலளித்துள்ளஅமெரிக்கஉயர்அதிகாரி ஒருவர், “நாங்கள் பல மாதங்களாகக் காசாவில் யாரும் சாத்தியமில்லை என்று நினைத்த காரியங்களைச் செய்துள்ளோம். இது எங்களது திட்டம், இஸ்ரேல் இதற்கு ஒத்துழைக்க வேண்டும்” என்று தெரிவித்துள்ளார்.

# ஐரோப்பிய நாடுகள் மீது ட்ரம்ப் வரிப்போர் ஐரோப்பிய ஒன்றியம் அவசர ஆலோசனை



உலகின் மிகப்பெரிய தீவான கிரீன்லாந்தை அமெரிக்காவுடன் இணைக்கும் தனது திட்டத்திற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் நட்பு நாடுகள் மீது இறக்குமதி வரிகளை விதிக்கப் போவதாக அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் விடுத்துள்ள மிரட்டல், உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இதனைத் தொடர்ந்து ஐரோப்பிய ஒன்றிய தூதுவர்கள் நேற்று அவசர ஆலோசனையில் ஈடுபடவுள்ளனர்.

டென்மார்க், நோர்வே, சுவீடன், பிரான்ஸ், ஜேர்மனி, பிரித்தானியா, நெதர்லாந்து மற்றும் பின்லாந்து ஆகிய நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருள்களுக்குப் புதிய வரிகளை விதிக்கப் போவதாக ட்ரம்ப் நேற்று முன்தினம் அறிவித்தார்.

முதற்கட்டமாக எதிர்வரும் பெப்ரவரி 1 ஆம் திகதி முதல் 10 சதவீத வரி விதிக்கப்படும் என்றும், பின்னர் அது 25 சதவீதம் வரை உயர்த்தப்படலாம் என்றும் அவர் எச்சரித்துள்ளார்.

அமெரிக்காவின் பாதுகாப்புக்கு கிரீன்லாந்து மிக அவசியம் என்று வாதிடும் ட்ரம்ப், தேவையேற்பட்டால் அதனைப் பலவந்தமாக கைப்பற்றுவதையும் நிராகரிக்க முடியாது எனக் கூறியுள்ளார்.

இந்தநிலையில், ட்ரம்பின் இந்த அதிரடி அறிவிப்பு ஐரோப்பிய நாடுகளிடையே கடும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது:

அதற்கமைய, பிரித்தானிய பிரதமர் கெய்ர் ஸ்டார்மர், ட்ரம்ப்பின் இந்த மிரட்டல் முற்றிலும் தவறானது” எனத் தெரிவித்துள்ளார்.

அத்துடன், பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன், இதனை ஏற்றுக் கொள்ள முடியாத ஒன்று” என வன்மையாகக் கண்டித்துள்ளார்.

டென்மார்க் உள்ளிட்ட பாதிக்கப்பட்ட பிற ஐரோப்பிய நாடுகளும் அமெரிக்காவின் இந்த ஒருதலைப்பட்சமான நகர்வுக்கு எதிராகத் தங்களது கண்டனங்களைப் பதிவு செய்து வருகின்றன.

இந்த வரி மிரட்டலால் ஏற்படக்கூடிய பொருளாதாரப் பாதிப்புகள் மற்றும் அமெரிக்காவின் ஆக்கிரமிப்புப் போக்கினை எதிர்கொள்வது குறித்து விவாதிக்க ஐரோப்பிய ஒன்றிய தூதர்கள் இன்று கூடுகின்றனர். இந்தப் பேச்சுவார்த்தையின் முடிவில் அமெரிக்காவிற்கு எதிரான கூட்டுப் பொருளாதாரக் கொள்கைகள் அறிவிக்கப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.



# சிரியாவில் அமெரிக்கப் படைகள் தாக்குதல் அல்-கொய்தா முக்கிய தலைவர் கொலை!

சிரியாவின் வடமேற்குப் பகுதியில் அமெரிக்க இராணுவம் நடத்திய தாக்குதலில், டிசம்பர் மாதம் அமெரிக்க வீரர்களை கொன்ற ஐ.எஸ். பயங்கரவாதியுடன் தொடர்புடைய அல்-கொய்தாவின் மூத்த தலைவர் கொல்லப்பட்டுள்ளார்.

இதுகுறித்து அமெரிக்காவின் இராணுவ அமைப்பான சென்ட்காம் வெளியிட்ட அறிக்கையில்,

“அமெரிக்கப் படைகள் ஜனவரி 16 அன்று இந்தத் தாக்குதலை நடத்தியது. இதில், பிலால் ஹசன் அல்-ஜாசிம் என்ற அல்கொய்தா பயங்கரவாத அமைப்பின் முக்கிய தலைவர் கொல்லப்பட்டார். இவர், டிசம்பரில் அமெரிக்க வீரர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு காரணமான ஐ.எஸ். இயக்கத்தைச் சேர்ந்த ஒருவருடன் நேரடித் தொடர்பு கொண்டிருந்தார்.

அல்-ஜாசிம் அந்தத் தாக்குதலில் ஈடுபட்ட ஐ.எஸ். பயங்கரவாதியுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டிருந்தார். மேலும், அந்த பயங்கரவாத நடவடிக்கைகளைத் திட்டமிடுவதில் பங்கு வகித்தார். மூன்று அமெரிக்கர்களின் மரணத்துடன் தொடர்புடையவரின் மரணம், எங்கள் படைகளைத் தாக்கும் பயங்கரவாதிகளைத் துரத்திச் செல்வதில் எங்கள் உறுதியை வெளிப்படுத்துகிறது.

அமெரிக்கக் குடிமக்கள் மற்றும் எங்கள் போர்வீரர்கள் மீது தாக்குதல்களை நடத்துபவர்கள், திட்டமிடுபவர்கள் அல்லது தூண்டுபவர்களுக்கு பாதுகாப்பான இடம் எதுவும் இல்லை. நாங்கள் உங்களைக் கண்டுபிடிப்போம்” என்று சென்ட்காம் தளபதி அட்மிரல் பிராட் கூப்பர் கூறினார்.

சிரியாவின் பால்மைராவில் டிசம்பர் 13 அன்று நடந்த பயங்கரவாத தாக்குதலில் இரண்டு அமெரிக்கப் படைவீரர்களும், ஒரு அமெரிக்க மொழி பெயர்ப்பாளரும் கொல்லப்பட்டனர். மேலும் சில அமெரிக்க மற்றும் சிரியப் பணியாளர்கள் காயமடைந்தனர்.

இந்த தாக்குதலைத் தொடர்ந்து, சென்ட்காம் “ஹாக்ஐ ஸ்ட்ரைக்“ என்ற பெயரிடப்பட்ட நடவடிக்கையின் மூலம் சிரியா முழுவதும் பெரிய அளவிலான தாக்குதல்களைத் தொடங்கியது. இந்த நடவடிக்கையின் கீழ், அமெரிக்கப் படைகள் 100-க்கும் மேற்பட்ட ஐ.எஸ். உள்கட்டமைப்பு மற்றும் ஆயுதத் தளங்களை இலக்காகக் கொண்டு, 200-க்கும் மேற்பட்ட துல்லியமான தாக்குதல்களை நடத்தியது.

கடந்த ஓராண்டில், அமெரிக்க மற்றும் கூட்டாளிப் படைகள் சிரியா முழுவதும் 300 இற்கும் மேற்பட்ட ஐ.எஸ் பயங்கரவாதிகளைக் கைது செய்துள்ளன. மேலும் 20 இற்கும் மேற்பட்டோரைக் கொன்றுள்ளன.



# இன்றைய ராசி பலன்கள் -19.01.2026

## மேஷம்

இன்று பொதுவாக சிறந்த நாள். நீங்கள் மிகவும் கவனமாக செயலாற்ற வேண்டும். புத்திசாலித்தனத்தை மேம்படுத்திக் கொள்வது நல்லது.

உங்களுள் மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணர்வதன் மூலம் திருப்தி காண்பீர்கள். உங்கள் பணிகள முடிப்பதற்கு இது பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் வெளிப் படையாகப் பழகுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வை பராமரிக்க இயலும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். புதிய முதலீடு போன்ற முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

இன்று பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் உங்கள் ஆரோக்கியம் மேம்படும்.

## ரிஷபம்

இன்று உற்சாகமான நாளாக இருக்காது.இன்று அதிக பலன்கள் எதிர்பார்க்க இயலாது. குழப்பம் நிலவும். பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு உதவிகரமாக இருக்கும். குழந்தைகளின் முன்னேற்றமும் நீங்கள் எதிபார்க்கும் வகையில் இருக்காது.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். இன்று நீங்கள் திட்டமிட்டு ஆற்றலுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் உறவில் நல்லிணக்கமும் மகிழ்ச்சியும் பராமரிக்க நீங்கள் எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். உங்கள் பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. காய்ச்சல் மற்றும் தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.

## மிதுனம்

இன்று நீங்கள் மிகவும் யதார்த்தமாக இருக்கவேண்டியது அவசியம். உங்களை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வதன் மூலம் உங்கள் நம்பிக்கை அதிகரிக்கும். இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்காது.

சிறந்த பலன்களைக் காண இன்று நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் பணியில் வெற்றி காண நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். இதன் மூலம் உங்களுக்கு திருப்தி உண்டாகும்.

உங்கள் மனதில் அகந்தை உணர்வு காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும்.

பொறுப்புகள் அதிகரிப்பதன் காரணமாக இன்று பணப்பற்றாக்குறை காணப்படும்.சூழ்நிலையை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.

உங்கள் தாயின் உடல் நலத்திற்காக பணம் செலவு செய்ய நேரும். இது உங்களுக்கு கவலையை உண்டாக்கும்.

## கடகம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் இலக்குகளை எளிதில் அடைய முடியும். இன்று நீங்கள் சிறந்த திட்டங்கள் மூலம் பயன் பெறுவீர்கள்.

இன்று உங்கள் பணிக்கு பாராட்டு பெறுவீர்கள். கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நண்பர் வீட்டு திருமணத்தில் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். இது உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று வலுவான நிதி ஆதாரத்தை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.

## சிம்மம்

ஏழை மற்றும் உடல் ஊனமுற்றோருக்கு தானங்கள் மற்றும் தொண்டு செய்ய இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.இதனால் கடவுளின் ஆசியும் மகிழ்ச்சியும் கிட்டும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று அதிக பணிகள் இருப்பதாக உணர்வீர்கள். இன்று திட்டமிட்டு பணியாற்றினால் வெற்றி கிடைக்கும். சக பணியாளர்களால் தொல்லைகளை சந்திப்பீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் அதிகமாக பேசுவதை தவிர்க்கவும். நீங்கள் இருவரும் இடைவெளியுடன் பழகுவது நல்லது. இதனால் விரும்பத்தகாத சூழ் நிலைகளை தவிர்க்கலாம்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். இன்று அதிக பொறுப்புகளை சந்திக்க வேண்டியிருக்கும். தேவையற்ற செலவுகள் செய்ய வேண்டியிருக்கும்.

## கன்னி

இன்றைய நாளில் சில போராட்டங்கள் இருக்கும் என்பதால் பொறுமையாக கையாள வேண்டும். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வது உதவியாகவும் ஆறுதலாகவும் இருக்கும்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது போராட்டங்களை சந்திப்பீர்கள். சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பதில் பிரச்சினை காணப்படும்.

உங்கள் துணையுடன் கவனமாகப் பேசவும். இன்று நீங்கள் உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதி நிலைமை சிறப்பாக இருக்காது. இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள்.

## துலாம்

இன்று நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. மன சஞ்சலம் காரணமாக சாதகமான விளைவுகள் காண்பதில் தடை இருக்கும்.

பணியில் வளர்ச்சி சிறிது குறைந்து காணப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

இன்று உங்கள் கட்டுப்பாட்டை இழக்க நேரலாம் எனவே சகஜமான அணுகுமுறை தேவை. அமைதியான முறையில் விஷயங்களை ஏற்றிக் கொள்வதன் மூலம் அன்பும் மதிப்பும்பெருகும்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. அதிக பொறுப்புகள் காணப்படும்.உங்கள் குடும்பத்திற்கு அதிக பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும்.

## விருச்சிகம்

இன்று கவனம் இழக்க வாய்ப்புள்ளது. அதனால் பின் தங்கியிருப்பீர்கள். உங்கள் செயல்களில் கவனம் தேவை. தியானம் மேற்கொள்வதன் மூலம் கடினமான சூழ்நிலையை சமாளிக்க இயலும்.

உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. பணியில் பலன்கள் உங்களுக்கு சாதமாக அமைய திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். அவரை நண்பர் போல நடத்துவதன் மூலம் ஆரோக்கியமான உறவு காணப்படும்.

இன்று மிதமான பணப்புழக்கம் காணப்படும். அதிகரிக்கும் பொறுப்புகளை நிர்வகிப்பது கடினமாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள நீங்கள் கடன் வாங்க நேரலாம்.

சளி சம்பந்தமான பிரச்சினை காணப்படும்.

# இன்றைய ராசி பலன்கள் -19.01.2026




நீங்கள் உங்கள் ஆற்றல் மூலம் வெற்றி காண்பீர்கள். உங்கள் மனது தெளிவாக இருக்கும். எனவே உங்கள் செயல்களை சிறப்பாக ஆற்றுவீர்கள். உங்களின் உறுதி காரணமாகஇன்றைய நாளை கழிப்பது உங்களுக்கு எளிதாக இருக்கும்.

புதிய வேலை வாய்ப்புகளால் நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் இருப்பீர்கள். உங்கள் பணிகளை விரைந்து மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பு வயப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று உங்களிடம் போதிய பணம் காணப்படும். பணத்தைப் பொறுத்த வரை திருப்தியான நிலை இருக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று மிகவும் சிறப்பான நாள். உங்கள் நலனை மேம்படுத்தும் சில பயனுள்ள முடிவுகளை நீங்கள் எடுக்கலாம். இன்று திருப்தி நிலவும்.

உங்கள் பணியில் சுமூகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சமநிலை உறவை பராமரிப்பீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நல்ல நட்புணர்வு மேம்படும்.

உங்கள் கையில் உள்ள பணம் போதுமானதாக இருக்கும். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பும் அதிகம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் திருப்தி காரணமாக சிறந்த ஆரோக்கிய நிலை இருக்கும்.




இன்று சற்று அனுகூலம் குறைவான நாள். இன்று நீங்கள் அதிர்ஷ்டத்தை விட உங்கள் முயற்சியை சார்ந்து செயல்பட வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணிகள் இறுக்கமாக காணப்படும். ஓய்வெடுக்க நேரம் குறைவாக காணப்படும். சிறப்பான பலன் காண திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் மனதில் காணப்படும் குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் ஆரோக்கியமான உறவை பராமரிக்க இயலாது. எனவே எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. அதிக செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

இன்று சிறிது அசௌகரியமாக உணர்வீர்கள். இதனால் பதட்டம் காணப்படும். ஆரோக்கியக் குறைபாடு ஏற்படும்.




அதிக பொறுப்புகளும் பதட்ட நிலையும் காணப்படும். இறை வழிபாட்டின் மூலம் உங்கள் மனதை கட்டுப்பாட்டுடன் வைத்திருக்க வேண்டும்.

நீங்கள் செய்யும் பணியில் உங்களுக்கு திருப்தி இருக்காது. பணியிடச் சூழலும் சிறப்பாக இருக்காது.

குழப்பமான மனநிலை காரணமாக ஸ்திரத்தன்மை குறைந்து காணப்படும். இதனால் உங்கள் துணையுடன் உங்கள் உணர்வுகளை நல்ல விதத்தில் பகிர்ந்து கொள்ள இயலாது.

இன்று குறைந்த அளவு பணம் காணப்படும். பெரிய அளவிலான புதிய முதலீடு சம்பந்தமான எந்த விதமான முடிவையும் எடுக்காதீர்கள்.

இன்று செரிமானம் சம்பந்தமான பிரச்சினை இருக்கும். எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்க வேண்டும்.

# குற்றமற்றவள் என நிரூபித்துக் காட்டு என்று மனைவி மீது மண்ணெண்ணை ஊற்றி தீ வைக்கச் செய்த கணவன் கைது!

## மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையில் சம்பவம்

(கனகராசா சரவணன்)

“குற்றமற்றவள் என நிரூபித்துக் காட்டு” என மனைவி மீது மண்ணெண்ணை ஊற்றித் தீப்பெட்டியைக் கொடுத்து,“ உனக்கு நீயே தீ வை!“ என்று வற்புறுத்தித் தீ வைத்து தீயில் எரிய வைத்த கணவனைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் சனிக்கிழமை காலையில் மட்டக்களப்பு முனைக்காடு பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளதாக கொக்கட்டிச்சோலை பொலிஸார் தெரிவித்தனர்.

கொக்கட்டிச்சோலை பொலிஸ் பிரிவிலுள்ள முனைக்காடு நாகதம்பிரான் கோவில் வீதியைச் சேர்ந்த கூலித் தொழிலாளியான 36 வயதுடைய தி.அனுஷ்வரன் அதே பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதுடைய பிரகலாதேவி என்பவரைத் திருமணம் முடித்து வாழ்ந்து வருகின்றார்.

இந்த நிலையில் நேற்று முன்தினம் காலை 8.30 மணியளவில் கணவன் – மனைவிக்கு இடையே நிதி தொடர்பான பிரச்சினை ஏற்பட்டு வாய்த்தர்க்கம் இடம்பெற்று வந்துள்ள நிலையில், மனைவியை விபச்சாரி என்று கணவன் குற்றம் சுமத்தி, குற்றமற்ற தன்மையை நிரூபித்துக் காட்டு என வற்புறுத்தி, அவளின் உடலில் மண்ணெண்ணை ஊற்றி தீப்பெட்டியை கொடுத்து அவளை தீ வைக்க வைத்தார் என்று கூறப்படுகின்றது. தீப்பற்றி எரிந்து கொண்டதில் படுகாயமடைந்த நிலையில் மனைவி மட்டு. போதனா வைத்திய சாலை அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனத் தெரிகின்றது.

மனைவியைத் தீ வைக்க வைத்த கணவன் தனக்கு தானே கூரிய ஆயுதத்தால் குத்தி தனைத் தான்ரெ காயப்படுத்திய நிலையில், மனைவியைக் கொலை செய்ய முயன்றமை மற்றும் தன்னை தானே காயப்படுத்திக் கொண்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் கீழ் அவரைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவரை நேற்று ஞாயிற்றுக்கிழமை நீதிவான் முன் ஆஜர்ப்படுத்த நடவடிக்கை எடுக்கப் பட்டிருந்ததாகொ பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலதிக விசாரணைகளை கொக்கட்டிச்சோலை பெரும் குற்றத்தடுப்பு பிரிவினர் மேற்கொண்டு வருகின்றனர்.